குணகடல் ராணி - (மதியழகன்...)

# திராவிடநாடு

4—3—56 35 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா

தண்டோரா சர்க்கார் (2)



தரும[illegible]

ச. சோமசுந்தர பாரதியார்

★

இலங்கையில் அர்த்தால்

★

நினைவிற் கொள்க!

★



## தூக்குதண்டனை

இனிமேல் மரணதண்டனை விதிக்கப்படப் போவதில்லை, பிரிட்டனில்! பெருங் குற்றமிழைத்தவனுயிரை ஒரே அடியில் போக்குவதைவிட, அவன் செய்த குற்றத்தை நினைத்து வாழ்நாளெல்லாம் நொந்து சாகவேண்டும்—என்று இந்தச் சட்டமியற்றப்பட்டது குறித்து விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை 293-பேர் ஆதரித்தார்களாம்; 262-பேர் எதிர்த்தார்களாம். பிப்ரவரி 16, தீர்மானம் சட்டமாகிவிட்டது, இங்கிலாந்தில்.

*

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைத் தண்டனை நிறைவேற்றுமுன் உன்னுடைய கடைசி ஆசை என்ன, என்று அதிகாரிகள் கேட்பதுண்டு. அப்படிக் கேட்டபோது அலகாபாத்தில் ஒரு கைதி தன்னுடைய பெயர் எல்லாப் பத்திரிகைகளிலும் வர வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டானாம், விந்தையான விளம்பர ஆசை! இதைப்போல குயுபெக்கில் ஒரு கைதியைத் தனது கடைசி ஆசையைத் தெரிவிக்கும்படி கேட்டபோது, "கலியாணம்" என்றானாம். திகைத்த அதிகாரிகள் "என்ன?" என்று வியப்போடு கேட்க, "ஆமாமய்யா! நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். கலியாணமாகாமலே குழந்தை பிறந்துவிட்டது. நான் இறந்து போனதற்குப் பிறகு அவளை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். கன்னிப் பருவத்திலேயே கெட்டுப் போனவள் என்று ஏசுவார்கள்! அதினாலும் அவளைமீட்கக் கலியாணம் செய்துகொண்டு, உயிரை விடுகிறேன்" என்றானாம்! அவன் கூறியதில் நியாயம் இருந்தது. ஆனால், 'திருமணமானதும் பிண மேடை!' எனும் செய்தி, மக்கள் மன்றத்தில் விளைக்கும மன உணர்ச்சிகளை எண்ணி, அனுமதி மறுக்கப்பட்டது.

* * *

## பாகிஸ்தானில்

ஒரு பிணவூர் வலம் கடந்த ஜனவரி 5-ந்தேதியன்று கராச்சியில் பரபரப்பை உண்டாக்கிவிட்டதாம். ஓடோடியும் சென்று விபரம்

# கேட்டீரா, சேதியை!

விசாரித்தாராம், 'பாகிஸ்தான் டைம்ஸ்' நிருபர். ஏனெனில், 'மயானத்துக்குப் போய்க்கொண்டிருந்த பிணத்தைச் சுட்டிக்காட்டி, "ஐயோ பாவம்! லீக்கைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள் சுடுகாட்டுக்கு" என்று மக்கள் பேசிக்கொண்டனராம். லீக், என்றால் பாகிஸ்தானின் அரசியல் கட்சியாயிற்றே! அதையா, தூக்கிக்கொண்டு போகிறார்கள்? அரசியல் எதிரிகளின் பிரச்சார வேலையோ? என்று ஐயுற்ற நிருபர் ஓடோடியிருக்கிறார். 'என்னய்யா, லீக்கா செத்துவிட்டது?' 'ஆமாம்! சந்தேகமிருந்தால் அதோ அழுதுகொண்டுள்ளாரே லீக்கின் அப்பா; அவரைப்போய்க் கேளுங்கள்!

நிருபர் கேட்டார், அவரை ஆமய்யா, லீக்தான் செத்துப்போய் விட்டது, என்று கதறினாராம் அத்தந்தை! நிருபருக்கு விபரம் புரியவில்லை. திகைத்தார். பக்கத்தில் விசாரித்தபோது சொன்னார்களாம். அந்தப் பெரியவருடைய மகன் பெயர் லீக்! முஸ்லீம் லீக்கின் மீது உள்ள பிரியத்தால் மகனுக்கே அப்பெயரை வைத்தாராம். அவன் தான் இறந்துபோனது. அவருடைய பெண்ணுக்கு 'பாகிஸ்தான்' என்றும் பெயர் இட்டுள்ளாராம்!

* * *

கிழக்குபாகிஸ்தானில் உருது மொழியோடு வங்காள மொழியையும் அரசியல் மொழியாக்க வேண்டும் என்று கோரி வெற்றிபெற்ற செய்தியை யாவரும் அறிவோம். இப்போது இன்னொரு அரசியல் கிளர்ச்சி எழுமா எனும் அச்சம் உண்டாகியுள்ளதாம், அங்கே! வங்காளி மொழியில் இயங்கும் அச்சகங்கள் கிழக்கு வங்கத்தில் ஏராளமாகயிருந்தும் பாகிஸ்தான் சர்க்கார், பாடபுத்தகங்களை எல்லாம் அமெரிக்காவிலிருந்து அச்சடித்துக்கொண்டு வந்துள்ளதாம். இது ஏன்! எங்கள் மொழியினருக்குச் சலுகைதரக்கூடாது என்கிற கெட்ட எண்ணம்தானே! வங்காளி மொழியில் வல்லவரோ அமெரிக்கர்?—என்றுகூறி, அப்படிப்பட்ட நூல்களை வாங்காமல் புறக்கணிக்குமாறு அவாமிலீக், வேண்டுகோள் விட்டிருக்கிறது.

* * *

## 'பறக்கும்' செய்திகள்

இரப்பரால் ஒரு ஆகாயவிமானம் செய்திருக்கிறார்களாம் 'குட் ஈயர்' கம்பெனியார். சமீபத்தில், வெள்ளோட்டமும் விட்டனராம். அந்த விமானத்தை, காருக்குப்பின்னால் சுருட்டிமடக்கிவைத்துவிடலாமாம். வேண்டுமென்கிறபோது, எடுத்து, காற்று அடைத்து பறந்து செல்லலாம், மணிக்கு 40மைல் வேகத்தில் அது போகுமாம்.

அமெரிக்கக் கம்பெனியொன்று வாஷிங்டனிலிருந்து தெரிவிக்கிறது — பறக்கும் மேஜையொன்றைத்தயாரிப்பதாக! 200 இராத்தல் எடையுள்ள அந்த மேஜையில் ஒரு ஆள் உட்காருவதற்குவசதியுண்டு. அதை ஓட்ட, விசேஷப் பயிற்சியெதுவும் தேவையில்லையாம். மணிக்கு 65 மைல் வேகத்தில் 150 மைல்வரை செல்ல முடியுமாம். ஓட்டுபவர், உடம்பை இப்படியும் அப்படியும் அசைப்பதன் மூலமாகவே அதைத் திருப்பலாம். இப்படிப்பட்ட மேஜைகளில் தங்களுக்கு 12 வேண்டுமென்று அமெரிக்க ராணுவம் 'ஆர்டர்'கொடுத்துமிருக்கிறதாம்.

*

பலூன் பறப்பது, பெரிய அகில உலகப் பிரச்சனையாகியிருக்கிறது. ரஷ்யாவின்மேல், பல பலூன்கள் பறந்தனவாம்! அவைகளை இறக்கிப் பார்த்ததில் ஒவ்வொருபலூனுக்குள்ளும், புகைப்படம் எடுக்கும் கருவிகளிருந்ததாம். இது அமெரிக்காவுடைய வேவுபார்க்கும்முறைகளில் ஒன்று என்று ரஷ்யா குற்றம் சாட்டுகிறது. அமெரிக்காவோ, இல்லை! இல்லை! பருவ நிலையைக் கணக்கெடுக்கும் இயந்திரத்தையே வைத்திருந்தோம்; என்று மறுக்கிறது. இந்தப் பலூன் விஷயம், மிகப் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது, உலக அரங்கில்!

★

ஆண்டுச் சந்தா ரூ-7

மலர் 14 இதழ் 35

4—3—56

# வரி! வரி!!

"வரிகளை அதிகமாக்குவதே வழக்கமாகிவிட்டது, இந்த சர்க்காருக்கு!" என்று வருத்தப் பட்டுக்கொண்ட கே. பி. கோபாலன் என்பார், வழிமுறைகள் சிலதையும் வெளியிட்டிருக்கிறார், சென்னை சட்டசபையில்! அதிக செலவாக 3 கோடி ரூபாய்க்குமேல் ஆகிறது, அதை ஈடுகட்ட டீசல் எண்ணெய்க்குக் காலனுக்கு இரண்டரை அணா அதிகவரி, மின்சாரவிசைக் கட்டணம் 30 சதவிகிதம் அதிகமாகும், சர்க்கரைக்கு விற்பனைவரி ரூபாய்க்கு 1 அணா அதிகமாகும், என்று. இப்படி வரிகளை அள்ளி வீசியிருக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம். அப்போதுதான் அதிகமாகும் செலவை ஈடுகட்ட முடியுமாம்! அதற்காக, மக்களின் உபயோகப் பொருளான சர்க்கரைக்கு வரி—பஸ்கள் உபயோகிக்கும் டீசல் எண்ணெய்க்கு வரி. இப்படி, மக்களின் தலையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வரிகளைச் சுமத்தாமல் சர்க்கார் வாழ முடியும், இதோ வழி வகைகளைச் சொல்லுகிறேன் என்கிறார், கோபாலன்.

தேயிலைக் காபித் தோட்டங்கள்—பஸ் போக்குவரத்து—வெளிநாட்டு வியாபாரம் — காடுகள் பராமரிப்பு— முதலியவைகளை சர்க்காரே ஏற்று நடத்தலாமே, மலபாரிலுள்ள காடுகளிலிருந்து மட்டும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 2 கோடி வருமே; என்று அறிவிக்கிறார், அவர். காடுகளில் மட்டிலும் இரண்டுகோடி! அமைச்சர் தேவையென்று கூறுவது 3 கோடி சொச்சம்!

செலவழிக்கப் பணம் தேவையென்று சொன்னால், மாநில அரசும் சரி, மத்திய அரசும் சரி, ஏதாவது புதிய வரிகளைப் போட்டு, மக்களிடமிருந்து அவைகளை வசூலித்துவிடலாம் என்று கருதுகிறதே ஒழிய, தானும் சம்பாதிக்கவேண்டும் என்று எண்ணுவதே கிடையாது. அந்தச் சுறுசுறுப்பு வந்தால், எவ்வளவோ பணம் சம்பாதிக்கலாம் சர்க்கார்! சென்னை பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்துவதால், எவ்வளவோ ஊழல்களிருந்தும்கூட, பல லட்சத்துக்கு வருமானம் வந்திருக்கிறது, சர்க்காருக்கு. நாடு முழுவதிலுமுள்ள போக்குவரத்துகளை சர்க்கார் ஏற்று நடத்தினால், எப்படி டில்லிக்கு ரயில்வே ஒரு 'கற்பக விருட்சம்' மாதிரி உளதோ, அதுபோல சென்னைக்கு பஸ் போக்குவரத்தும் விளங்கக்கூடும். ஆனால், இவர்கள், நம் தலையில் கை வைக்கிறார்களே ஒழிய, எங்கே சொந்த முயற்சியிலிறங்குகிறார்கள்.

சென்னை அரசின் வரவு செலவு வெளியானதும் சில வரிகள் விழுந்தன; உடனே, டில்லியும், 'உனக்கு நான் என்ன மட்டமோ?' என்று கேட்பதுபோல, தபால் தந்திக் கட்டணங்களை உயர்த்தியும், இன்னும் சில வரி உயர்வுகளையும் செய்துள்ளது. ரயில்வே பட்ஜட்டிலும், வரி உயர்வு இல்லாமலில்லை. இப்படி, மார்ச்சு மாதம் வந்தாலே, 'என்ன புதிய வரி செலுத்தவேண்டுமோ?' என்று அஞ்ச வேண்டிய அளவுக்கு இருக்கிறது, நாடு!

திராவிடத்தில் வாழும் நாம் 'இரு சர்க்கார்'களுக்கு வரிகட்டும் அக்கிரமத்துக்கு ஆளாகிக் கிடக்கிறோம். இந்த அக்கிரமம் ஒழிந்தால், சென்னைக்கு வருமானம் வரக்கூடிய வழிகள் நிறையக் கிடைக்கும். அந்த வழிகளில் ஒன்று, வெளிநாட்டு வியாபாரமாகும்! அன்பர் கோபாலன், தன்னுடைய யோசனையில், சென்னை சர்க்கார் வெளிநாட்டு வியாபாரத்தையும் கூட ஏற்று நடத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வியாபாரம், டில்லியின் வசமிருப்பது! அதனை சென்னை ஏற்று நடத்தலாமெனக் கூறும் கோபாலன், திராவிடப் பார்லிமெண்டரி கட்சிக்காரரல்ல; கம்யூனிஸ்டு!

வருமானம் வளர, வழிகள் எத்தனையோ உண்டு. ஆனால், டில்லிக்குச் சாமரம் வீசும் சென்னை அரசு, அவ்வழிகளைப் பெறவும் முயலாமல், சொந்த முயற்சியும் செய்யாமல், நொந்த மக்களின் தலைமீது கைவைப்பதையே வழக்கமாகக்கொண்டிருக்கிறது. எனினும் ஏழை எளியோர் மீது பரிவு காட்டும் போக்கில் போலீசார் போன்ற எளிய ஊதியம் பெறுவோர் பிள்ளைகளுக்குப் பத்தாம் வகுப்பு வரை, இலவசக் கல்வி தர திட்டமிட்டிருக்கிறது. ஏதோ 'இந்த' மட்டிலுமாவது நல்லெண்ணம் வந்ததே என்றெண்ணி மகிழ்கிறோம். ★

# தண்டோரா சர்க்கார்!

(2)

**தம்பி!**

"இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால், யாரோ ஒரு விஷமி, நமது மகாராஜாவுக்கு 'வெண் குஷ்டம்' கண்டிருக்கிறது என்று ஓர் வதந்தியைப் பரப்பிவிட்டிருக்கிறான். நமது மக்களில் சிலர் அதை அப்படியே நம்பிவிட்டதாகத் தெரிகிறது. மகாராஜாவின் உடம்பு பத்தரைமாற்றுப் பசும்பொன் போன்றே எப்போதும்போல இருக்கிறது. 'ஸ்நானம்' செய்தானதும் சிவபக்தராம் நமது அரசர்பெருமான் தூய வெண்ணீறு அணிந்துகொள்வது வாடிக்கை, அதையே சில துஷ்டர்கள் 'வெண்குஷ்டம்' என்று கூறிவிட்டிருக்கிறார்கள். இந்த வதந்திக்கு ஒரு துளியும் ஆதாரமில்லை"

*நகரெங்கும் இப்படி 'தண்டோரா' போடச் செய்தான் மந்திரி—இராஜாவின் பெயரைக் காப்பாற்ற!*

*அரசனுக்குக் குட்டநோய் கண்டிருப்பதாக, யாரோ வதந்தி கிளப்பி விட்டார்கள் என்று கேள்விப்பட்ட 'மந்திரி' இராஜாவின் மரியாதையையும் புகழையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பு தனக்கு இருக்கிறது அதைத் திறமையாக நிறைவேற்றி விடவேண்டும், மன்னர் பார்த்துப் பாராட்டவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, இவ்விதம் 'தண்டோரா' போடச்சொன்னான். நகரெங்கும் தண்டோரா போட்டனர். ஊர் மக்கள் அங்காடியிலும் நெடுஞ்சாலைகளிலும், முச்சந்திகளிலும்; கூடினர்.*

*"விஷயம் தெரியுமா?"*

*"எது? மகாராஜாவுக்கு வெண்குஷ்டம் என்பதுதானே. உனக்கு இப்போதுதான் தெரியுமா? எனக்கு நெடுநாளாகவே தெரியுமே"*

*"அப்படியா, ஊரில் எல்லோருக்கும் இந்த விஷயம் தெரிந்துவிட்டதால்தான், 'தண்டோரா' போட்டார்கள்போலிருக்கிறது"*

*"ஆமாம்... தண்டோரா போட்டு ஊர் மக்கள் 'வாயை' மூடிவிடலாம் என்று எண்ணுகிறார் இந்தப் புத்திசாலி மந்திரி"*

*"திருநீறு பூசிக்கொள்கிறார் மன்னர், அது குஷ்டம்போல இருக்கிறது என்று 'தண்டோரா' மூலம் தெரிவிக்கிறார்களே?"*

*"வேறே, எப்படித் தெரிவிப்பார்கள்? பைத்யக்காரனாக இருக்கிறாயே, மகாராஜாவுக்குக் குஷ்டம் பிடித்துவிட்டிருப்பது உண்மைதான் என்று 'தண்டோரா' போடுவார்கள்? திருநீறு இவர்மட்டுமா பூசிக்கொள்கிறார்? திருநீறு பூசிக்கொள்கிறவர்களை எல்லாமா வெண்குஷ்டம் பிடித்திருக்கிறது என்று கூறுகிறோம?"*

*"இல்லாமற் பிறவாது, அள்ளாமற் குறையாது"*

*"குற்றமுள்ள நெஞ்சுதானே குறுகுறுக்கும். மகாராஜாவுக்கு உண்மையிலேயே குஷ்டம் இல்லை என்றால், எவனோ பைத்யக்காரன் எதையோ உளறினான் என்று சும்மா விட்டுவிட்டிருப்பார்களா, இல்லை, இல்லை, மகாராஜாவுக்குக் குஷ்டம் இல்லை என்று 'தண்டோரா' போடுவார்களா?"*

*"அதுதானே, நானும் யோசிக்கிறேன். குட்டு வெளிப்பட்டுவிட்டது என்று திகல். எங்கே ஊரிலே இதுபற்றி ஏழிவாகப் பேசுகிறார்களோ என்ற பயம். அதனாலே 'தண்டோரா' போடுகிறார்கள்"*

*"தண்டோரா போட்டுவிட்டால், மக்கள் ஏமாந்துவிடுவார்களா?"*

*"அதெப்படி முடியும். எனக்கு உண்மையில், தண்டோரா போட்ட பிறகுதான் ராஜாவுக்குக் குஷ்டம் என்கிற விஷயமே தெரியவந்தது"*

*மந்த புத்தி படைத்த மன்னர்களும், மதியற்ற மந்திரிகளும் இருந்த காலத்துக் கதை.*

*இந்தக் காலத்திலும் இப்படி 'தண்டோரா'போடும மந்திரி இராஜ்யம் இருக்குமென்று என்னால் நம்பமுடியவில்லை — ஆனால் செவியில் விழுகிறதே "தண்டோரா"*

கடைகளை மூடவேண்டாம்.

கடைகளை மூடவே வேண்டாம்.

போலீஸ் பாதுகாப்பு அளிக்கிறோம்.

போலீஸ் பாதுகாப்புப் போதுமான அளவு தருகிறோம்.

கடைகளைத் திறந்து வையுங்கள்.

அர்த்தாலில் சேரவேண்டாம்

*என்றல்லவா 'தண்டோரா' போடுகிறார்கள்! அதற்கும் போலீஸ் பாதுகாப்பு!!*

*மன்னனுக்குக் குட்டம் கிடையாது என்று தண்டோரா போட்ட பிறகே, ஊரிலே அனைவரும், மன்னனுக்குக் குட்டம் இருப்பதுதான் உண்மை என்று பேசிக்கொண்டனர் — அதுபோலவே, வசதிக்குறைவிலே இருந்து வந்த நம்மாலே தெரிவிக்கமுடியாத இடங்களுக்கும் 'தண்டோரா' மூலம் பிப். 20 அர்த்தால் நடைபெறப்போகி*



றது என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது. அங்காடியிலும் பெஞ்சாலையிலும், அர்த்தாலைப்பற்றி மக்கள் பேசிக்கொள்ளலாயினர்.

அர்த்தாலாமே?

யார் சொன்னது?

சர்க்காரே, தண்டோரா போட்டார்கள்!

அர்த்தால் நடத்தச் சொல்லியா?

இல்லை, இல்லை, அர்த்தால் கூடாது என்று.

ஏன் கூடாதாம்?

அதைச் சொல்லவில்லை.

வேறே என்ன சொன்னார்கள்?

போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம், கடைகளைத் திறந்துவையுங்கள் என்று 'தண்டோரா' போட்டார்கள்.

அப்படியானால், நடக்கப்போகிற அர்த்தால், ரொம்பப் பிரமாதம் என்று தெரிகிறதே.

அதென்ன அப்படி?

இல்லையானால், ஒரு சர்க்காரே தண்டோரா போடுமா?

ஆமாமாம்!

## "தண்டோரா" இதற்குத் தான் பயன்பட்டது.

ஜனவரி 27-ல், சர்வகட்சி கூட்டணி, 'அர்த்தால்' பற்றிய தீர்மானம் தீட்டிற்று.

காங்கிரசும் திராவிடர் கழகமும் தவிர, பொதுமக்களிடம் தொடர்பு கொண்ட சகல கட்சிகளும், கூட்டணியில் இருந்தபோதிலும், அவ்வளவு கட்சிகளும், பிரச்சார சாதனமான பெரும் பத்திரிகைகள் இல்லாமலிருந்து வருவன. எனவே பொதுக் கூட்டங்கள் மூலமாக மட்டுமே நாட்டு மக்களுக்கு பிப்-20 அர்த்தால் பற்றிய செய்தியைக் கூற முடிந்தது.

இந்துவுக்கும் மித்திரனுக்கும், தினமணிக்கும் எக்ஸ்பிரசுக்கும், மெயிலுக்கும் இதுவா வேலை!!

இந்த நிலையில், 'தண்டோரா' போடச் சர்க்கார் முன்வந்தது கூட்டணியின் திட்டத்தை அனைவரும் ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள வாய்ப்பளித்தது.

சர்க்காரை நடத்தும் பெரிய கட்சியே, 'தண்டோரா' போட்டு, அர்த்தாலில் சேராதீர்கள், சேரவில்லை என்பதற்காக யாராவது ஏதாவது செய்துவிடுவார்களோ என்று அஞ்சத் தேவையில்லை, நாங்கள் பலமான போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம் என்று கூறவேண்டிய நிலைமை வந்ததென்றால், 'அர்த்தால்' குறித்து, மக்களிடம் வெகுவாகச் செய்தி பரவிவிட்டது, அர்த்தாலில் நாடு ஈடுபடத் தயாராகிவிட்டது, சர்க்காரே குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்தினாலொழிய அர்த்தால் முழு மூச்சுடன் நடைபெறும் என்பது, விளங்கிவிட்டது!

அந்த அளவுக்கு இந்தத் 'தண்டோரா' நமக்கு உதவியாக இருந்தது. மகிழ்ச்சி, நன்றி.

* * *

மகாமேதை என்று கொண்டாடப்படும் ஆச்சாரியாரின் இராஜதந்திரக் குறைவான போக்கு கண்டு, செச்சே! என்ன இந்தக்



கிழவர் இப்படி ஆழம் தெரியாமல் காலை நுழைத்துவிட்டு அவதிப்படுகிறார்; இவர் அவதிப்படுவதுடன் காங்கிரஸ் கட்சியின் பெயரையுமல்லவா பாழடிக்கிறார், வயதாகிவிட்டதாலே, வீணான வம்பு வல்லடிக்குத் தாமாகப் போய்த் தலைகொடுத்துவிடுகிறார், நான் இப்படி நடந்துகொள்ளமாட்டேன், எனக்குப் 'பக்குவம்' தெரியும், பதம்பார்த்து நடந்துகொள்வேன் அனைவரையும் அணைத்துச்செல்லுவேன், எதிர்க் கட்சிகளைத் தோழமைகொள்ளுவேன், அதற்கெல்லாம் என்னிடம் 'மந்திரம்' இருக்கிறது, யாருக்கு எதிலே விருப்பம், எதைச் சொன்னால் யாருக்கு இனிக்கும், பிடிக்கும் என்பதை அறிந்து நடந்துகொள்வேன், ஏங்கித் தவிக்கும் இடங்களாகப் பார்த்து இரண்டொன்று வீசுவேன், இப்படி நடந்துகொண்டால் எதிர்ப்பாவது முளைப்பதாவது, எல்லாம் எனக்குத் தெரியும் என்று கூறிவிட்டுக் கொலு வீற்றிருக்கப் புறப்பட்ட கோமானல்லவா காமராஜர்! அவர் பார் தம்பி! தமது பக்குவம், திறம், பண்பு ஆகியவற்றைக் காட்டவேண்டிய நேரம் வந்ததும், எல்லாம் சொல்லுமாம் பல்லி, காடிப் பானையில் விழுமாம் துள்ளி என்ற பழமொழிப்படி, 'மகாமேதை' செய்தது போலவே, தரக் குறைவும் ரசக் குறைவுமான காரியத்தில் ஈடுபட்டார்! 'தண்டோரா' போடச் செய்தாரே!!

கலகம் குழப்பம், கல்லெறி கத்திக்குத்து, கொள்ளை கொலை, ஆகியவை எப்போது எங்கே நேரிட்டுவிட்டாலும், தடுக்க, ஆட்களை மடக்க, பிடிக்க, தண்டிக்க, போலீஸ் எப்போதுமே இருக்கிறது, இதைத் தண்டோராபோட்டுத் தெரிவிக்கவேண்டிய அவசியமென்னவந்தது!!

அதிலும் 'அர்த்தால்' நடத்தும்படி, மக்களைக் கேட்டுக்கொண்ட நாமெல்லாம் பெரிய கட்சியினரா, பெருந் தலைவர்களா, இல்லையே! வசதியற்ற, வாய்ப்பு இல்லாத, கட்சிகள்!

'இதுகள்' பேச்சை, யார் கேட்கிறார்கள் என்றுதான் பொறுத்திருந்து பார்ப்போம். பி. டி. ராஜனும், ம. பொ. சி யும் சொல்வதைக் கேட்டுக்கொண்டு சுண்டல் கடையோ தண்டல் கடையோ, எதனையும் யாரும் அடைக்கமாட்டார்கள்; இதுகள் கரடியாய்க் கத்திவிட்டு, கடைசியில் முகத்தில் கரி பூசிக்கொள்ளட்டும், அப்போது நாம் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்போம், என்று இருந்திடும் தைரியம் காமராஜருக்கு ஏன் வரவில்லை!

முதல் மந்திரி வீட்டிலே மறியல் செய்தால் என்ன, குடியா முழுகிப் போய்விடும், ஒரு நாளைக்கு ஓடும் இரயிலை நிறுத்தித் தொலைத்தால் என்ன, 'பிரளயமா' வந்துவிடும், அதற்காகவேண்டி, தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்து, இந்தக் கிழப் பார்ப்பனர் காரியத்தைக் கெடுத்துத் தொலைத்தாரே! ஊரெல்லாம் கொதிக்கிறது — எல்லோரும் என்னையல்லவா கேட்கிறார்கள்? நானல்லவா, காங்கிரசின் செல்வாக்கைக் காப்பாற்றித் தீரவேண்டி இருக்கிறது—என்றெல்லாம் கதை அளந்துகொண்டு 'கனம்' ஆவதற்குப் பல்விளக்கிக் கொண்டிருந்ததை மறந்துவிட்டு, 'அர்த்தால்' நடத்துவதா? இதுகளா? என் காலத்திலா? அதை நான் பார்த்துக்கொண்டிருப்பதா?

என்று கருவிக்கொண்டு கிளம்பி, 'தண்டோரா' போட்டுவிட்டால் போதும், கடைக்காரர்கள், இவர் இருக்கும் திக்குநோக்கித் தெண்டனிட்டுவிட்டு, கடைகளைத் திறந்து வைத்துக்கொள்வார்கள், என்று எண்ணினார், காமராஜர்.

சர்வகட்சிக் கூட்டணி அர்த்தாலுக்காக எடுத்துக் காட்டிய காரணங்களை அங்காடி நண்பர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்ற அச்சமும்; தக்க காரணம் காட்டப்படுவதால், கடைக்காரர்களும் அலுவலகத்தினரும் பிறரும், தமக்கும் நீதியிலும் நேர்மையிலும் நாட்டம் உண்டு என்பதை எடுத்துக்காட்டும் வகையில், அர்த்தாலுக்குத் தமது ஒத்துழைப்பை அளிக்க முன்வருவர் என்று புரிந்துகொண்டதால் ஏற்பட்ட பீதியும்; சர்வகட்சிக் கூட்டணி அர்த்தாலுக்காக எடுத்துக்கூறிய காரணங்களை மறுத்துரைக்க வக்கும் வழியுமில்லையே என்பதாலே, ஏற்பட்ட மிரட்சியும் சேர்ந்து, சர்க்காரை, 'தண்டோரா' தூக்க வைத்தது! இந்த விந்தையைக் கண்டவர்கள், கடை அடைப்பதுடன், கைகொட்டியும் சிரிப்பரே என்று காமராஜர் சர்க்காருக்குத் தோன்றாமற் போயிற்று!!

* * *




'தண்டோரா' போடும்போதே தம்மிடம் போலீஸ் படைகள் ஏராளமாக உண்டு என்பதையும் ஊராருக்குக் காட்டிவிட வேண்டும் என்று எண்ணி, வகை வகையான போலீசை, நகரெங்கும் துரத்திற்று துரைத்தனம்.

சர்வகட்சிக் கூட்டணி பிப் 20 அர்த்தால் குறித்து, நகரில் வெளியிட்ட சுவரொட்டிகளை, மூவர்ணச் சினிமா விளம்பரங்கள் விழுங்கியே விட்டன! புன்னகை பூத்த முகத்துடன் பூவையும், பொறிபறக்கும் கண்களுடன் கதாநாயகனும் பொன்னொளியும் புகழொளியும் பரப்பும் விதமாகச் சுவரெங்கும் காட்சி தந்தபோது, பிப் 20ல் அர்த்தால் என்று நாம் வெளியிட்ட சுவரொட்டி எவ்வளவு மக்களுடைய கண்ணை ஈர்க்கும் என்று நான் கவலைப் பட்டதுண்டு. அந்தச் சுவரொட்டிகள் வெளியிடுவதற்கான பணம் தேடவே 'உன்னைப் பிடி என்னைப் பிடி' என்றாகி விட்டது!

கவசமணிந்த போலீசும், சைகிள் போலீஸ் படையினரும், போலீஸ் வான்களும் கிளம்பி, நகரெங்கும் 'பவனி' வந்தன—மக்கள் பிப், 20 நடைபெறவேண்டிய அர்த்தால் பற்றி, விவரமாக அறிந்துகொள்ள இந்நிலை பேருதவி புரிந்தது.

அர்த்தாலுக்குப் பேராதரவு இருக்கிறது — சர்வகட்சிக் கூட்டணியின வேண்டுகோளுக்கு மதிப்பளித்திட மக்கள் தயாராகி விட்டனர்—அர்த்தால் வேண்டாம், கூடாது, என்று துரைத்தனத்தார் சொல்வது தூசுக்குச் சமம் என்று மக்கள் தீர்மானித்துவிட்டார்கள், அர்த்தால் நடைபெறப்போவது உறுதி. நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமே என்ற கவலை, சர்க்காரைக் குடைகிறது. எனவேதான், கவசத் தொப்பி கிளம்பிவிட்டது, சைகிள் படை புறப்படுகிறது, போலீஸ் லாரிகள் பவனி வருகின்றன, என்று ஊரெங்கும் பேசிக்கொள்ளத்தலைப்பட்டார்கள்!

மன்னனுக்கு நிச்சயமாகக் 'குட்டம்' இருக்கிறது! — மக்கள் கூறிவிட்டனர்.

துரைத்தனத்துக்குத் துதி பாடவும் ஆதரவு தேடவும், பெரிய இதழ்கள் பாடுபட்டன!

அர்த்தால் வேண்டாம். — ஜனநாயக ஆட்சியில் அர்த்தாலுக்கு அவசியமேஇல்லை —என்று எழுதின.

பிப். 14-ல், அர்த்தால் வேண்டாம் என்று தினமணி தலையங்கம் தீட்டிற்று. பரிதாபம் என்ன என்கிறாய் தம்பி, பிப். 20ல் இத்தினமணி, விற்பனை செய்யப்படும் கடைகளே திறந்தில்லை!!

வேடிக்கை ஒன்று தெரியுமா உனக்கு. அர்த்தாலாவது நடப்பதாவது, அர்த்தால் என்றால் என்ன சாமான்யமா? மகாத்மா, நேரு போன்றவர்கள் நாட்டுக்குப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறபோது மட்டுமே 'கட்டளை' யிடுவார்கள், அப்போதுதான் 'அர்த்தால்' நடைபெறும், கண்டவர்கள், கண்ட கண்ட காரணம் காட்டிக் கடை அடைக்கச்சொன்னால், நடக்குமா! என்று கேலி பேசிய ஏடுகளை, பிப் 20ல் எப்படி வெளியே அனுப்பி வைத்தார்கள் தெரியுமா? 19-ந் தேதியே, 'இந்து' 'எக்ஸ்பிரஸ்' ஆகிய இரு இதழ்களுக்காகவும் துண்டு அறிக்கைகள் வெளிவந்தன.

**பிப் 20ந்தேதிய 'இந்து' விடியற்காலை 4-30க்கே, தயாராகிறது. ஏஜண்டுகள், அங்கேயே வந்து பெற்றுக்கொள்ளவும்.**

'இந்து' இதழை, நகரில் பல்வேறு இடங்களுக்கும் கொண்டுவந்து தருவதற்கில்லை—அன்று அர்த்தால் ஆகவே கடைகள் திறந்திருக்காது—விடிந்து 6, 7, ஆகிவிட்டாலும், இங்கு வந்து இதழ்களை வாங்கிக் கொண்டு போவதிலே தொல்லை இருக்கும், எனவே, வெள்ளி முளைக்கு முன், 4-30க்கே, ஓசைப்படாமல், ஒருவருக்கும் தெரியாமல், இங்கேயே வந்து, இதழ்களை எடுத்துக் கொண்டு போய்விடுங்கள்—என்று அறிக்கை தெரிவிக்கிறது.

கண்ணே! கதிரவன் ஒளிக்கிறல் தெரிகிறது! இனியும் நான் இங்கு இருப்பது, ஆபத்து! சென்று விடுகிறேன்!—என்று கூறிவிட்டு யாரும் காணாவண்ணம் மறைந்து மறைந்து செல்வான் காதலன் என்று கதைகளில் படிக்கிறோமல்லவா! 'இந்து'—விடியுமுன் வருக!

(15ம் பக்கம் பார்க்க)

# ★ தருமன் சால்பு ★

நாவலர் — கணக்காயர் — ச. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.

பாரதம் வட ஆரியர் காவியங்களுள் ஒன்று. அதை அவர் இதிகாசம் (பூர்வகதை) என்பர். அதில் தென்தமிழருக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது. அதன் கதாபாத்திரர்பால் தமிழருக்கு இயற்கை விருப்போ இருக்க வேண்டாம். அவரவர் கொள்கை குறிக்கோள் நோக்கம் செய்கைகளால் சீர்தூக்கி மதிப்பதே அறிவும் அறனுமாகும். பண்டிதரும் பாமரரும் தருமனைப் புகழ்ந்தும் துரியோதனனை இகழ்ந்தும் வருகின்றனர். கதைப்பவர் கூற்றைமட்டும் ஆதரவாய் ஏற்றுக் கொண்டாலன்றி, அவரவர் செயலையும் இயலையும் உரைகல்லாய்க் கொண்டு மதிப்பின், அவ்விருவரைப் பற்றி வழக்கிலிருக்கும் கொள்கை சரியாய்க் காணவில்லை. ஆழ்ந்து சூழ்ந்து அலசி அளப்பின், கதை காடடும் காட்சி வேறு. கதைப்பவர் போற்றும் மாட்சி வேறுமாய்த் தோன்றுகின்றன. ஆயினும் தமிழ்ப் புலவரும் ஆரிய ஆசிரியர் கூற்றை ஏற்று, தருமனைப்போற்றியும், சுயோதனனைத் தூற்றியும் வருகின்றனர். ஆதலால் இங்கு நாம் கதைதரும் காட்சியைச் சிந்தித்துப் புலவர் கூற்றைச் சீர்தூக்கி, உண்மையை ஓரளவு காண முயல்வோம்.

> **புலவீர் !**
>
> நாவலர் பாரதியார், தருமன் குறித்து, தமது கருத்துரையை வழங்கியுள்ளார்.
>
> உமது கருத்துரை யாது? கூறுமின்.
>
> 'திராவிட நாடு'

சுயோதனன் குடிகளுக்கோ குலத்தவர்க்கோ, தொண்டருக்கோ தோழருக்கோ யாதும் தீது செய்யவில்லை; செய்ய விரும்பவுமில்லை. எனினும் தருமன்பால் பகைமை பூண்டான். அது தவறாயின், அவனோடு வீடுமர் முதலிய குலத்தலைவரும், துரோணர் போன்ற ஆசிரியரும் சேரவும், தருமனோடு பகைத்துப் போரிடவும் துணிவானேன்? அவரனைவரும் அறம் திறம்பாச்சான்றோர் என்றே போற்றப்படுகிறார். எங்கும் அவர் சொல்லும் செயலும் அவரைத் தீயன வெறுக்கும் தூயவரென்றே காட்டுகின்றன. அவரனைவரும் ஊரிலும் என்றும் சுயோதனனோடும் வாழ்ந்து, பின் போரிலும் அவன் சார்பாய்த் தருமனோடு பொருகின்றனர். அதற்குத் தக்க நியாயம் வேண்டுமெனத் தோன்றிற்று. அதனால் சிறிதூன்றிச் சிந்தித்து, உண்மையை ஆராய்ந்தேன். நான் கொண்ட முடிவைப் பல ஆண்டுகளுக்கு முன்னமே "தருமர் தாயம்" என்றொரு கட்டுரையாய் எழுதி வெளியிட்டேன். அதை மறுத்து எனைத் திருத்த யாருமிதுவரை முன்வரவில்லை. ஆயினும் பண்டிதர் எவரும் 'அதுவே சரி' எனத் தழுவி எழுதவும் இல்லை. இப்போது இளைஞர் சிலர் தருமன் பண்புகளைத் தெளிவாக விளக்கி ஒரு கட்டுரை எழுதும்படி வேண்டினர். அவர் பொருட்டு இதனை எழுதலாயினேன்.

"தருமன் குருநாட்டில் பாதிப்பங்கு வேண்டினான். சுயோதனன் அதை மறுத்தான். ஆதலால் பாரதப்போர் மூண்டது; பார் அழிந்தது;" என்பது பண்டிதர் முதல் வாதம். வீடு—காடு போல, நாடு ஒரு குடும்பத்தார் தம்முள் பங்கிடும் தாயச் சொத்தில்லை. அது அரசன் மூத்த வாரிசுக்கே முழுதுரிமை. பின் பிறந்தாருக்கெல்லாம் வாழ வகைமட்டு முண்டு; அதற்கு மேல் எதுவுமில்லை. அறத்தொடு வழக்கும் அஃதே.

சுயோதனன் குருநாட்டரசனில்லை; அவன் தந்தை திருதிராட்டிரனே முடியுடை மன்னனாவான். அவன் கண் பார்வையில்லாக் கபோதி—குருடன். ஆகையால் நாட்டை அவன் மகன் சுயோதனன் அவனாய் ஆண்டுவந்தான்.

தருமன் சுயோதனன் சோதரனுமில்லை. அவன் இறந்த சிறிய தந்தை பாண்டுவின் மகன். தருமனுக்கு நாட்டில் பங்குரிமை உண்டாயின், சுயோதனன் உடன்பிறந்தார் நூற்றுவருக்கும தாயமுண்டாம். அவர் பங்கைக் கழியாமல், தருமன் நாட்டில் சரி பாதி கேட்ட தெப்படி? சரிபங்கு தருமனுக்கு நாட்டில் உண்டேல், வீடுமர், துரோணர் போன்ற சான்றோர் எல்லாரும் ஒன்று தருமனோடு சேர வேண்டும்; அன்றேல் ஒதுங்கிப் பொதுவாய் விலகல் வேண்டும். அறம் துறந்து, முறை திறம்பி, சுயோதனன் பொருட்டுப் போரில் அவன் சார்பாய்த் தருமனோடு பொருவாரா?

இனி, "தருமனே குருகுலத்தார் அனைவருக்கும் வயதில் மூத்தோன்; அதனால் அரசுரிமை அவனுக்கு முதலில் உண்டு" என்னில், வயது முதுமைக்காகமட்டும் அரசுரிமை தருவதில்லையே. பின் வழியில் முன் பிறந்தார் முன் வழியில் பின் பிறந்தோரின் நாட்டரசுச் சிறப்புரிமை பறித்தடைய அறமில்லை; வழக்குமில்லை. அரசனிறந்தால் வயதில் முதிய அவன் தம்பியர் இருக்க, இளையரான அவன் மக்களுள் மூத்தவனுக்கே அரசுரிமை இறங்குமன்றி, வயது முதுமைக்காக இறந்த அரசன் தம்பியர்க்கு இறங்காது. இருக்கும் திருதிராட்டிரனே அரசன்; அவனிறந்தால், அவன் மக்கள் நூற்றுவருள் அப்போதிருப்பவருள் முதல்வனுக்கே அவன் அரசு வரும். தருமன் அவருக்குத் தம்பியுமில்லை, அரசனிருக்க, அவனுக்குப் பின் வரிசையாய் அவனரசுக்குரிய அவன் மக்கள் நூற்றுவரிருக்க, அவன் இறந்ததும் தம்பி பாண்டுவின் புதல்வனான தருமனுக்கு நாட்டில் சரிபாதி உரிமை ஏது? அரசனிருக்க, அவனிறந்தால் நாடாள அவன் முதல் புதல்வன் தானிருக்க, ஒருகால் தானிறக்க நேரினும் தனக்குப் பின் உரிமை உடையார் வரிசையாய் நூறுபேரிருக்க, உரிமை கொள்ளாமலும் கோராமலும் இறந்த சிறு தந்தை மகன் தருமன் நாட்டில் பங்கு கேட்டதெப்படி? இது தருமன் மண்வெறுப்பு. நிற்க; இனி அவன் பெண் வெறுப்பையும் ஒருவாறு கருதிப் பார்ப்போம்.

துருபத மன்னன் தன்னைப் போரில் வென்ற இளையனான அருச்சுனனுக்

குத் தருதற்கென்றே தவம் செய்து கடவுளிடம் வரம் வாங்கித் துரோபதையைப் பெறருன். அவள் மங்கைப் பருவம் அடைந்தவுடன், அவளை மணப்பதற்கு அருச்சுனனைக் காணவில்லை. உருக்கரந்து புறம் திரிந்த பாண்டவருள் ஒருவனுன அவனைத் தேடத் துருபதன் ஒரு சூழ்ச்சி செய்தான்.

தனஞ்சயன் தவிரப் பிறர் எவரும் செய்ய வொண்ணு வில்லாண்மை அருஞ்செயல் ஒன்றைக் குறிப்பிட்டு, அதனைப் புரிபவர்க்கே தன் மகளைத் தருவதாகச் சூள் வைத்தான். சூள் களத்தில் பார்ப்பனராய் வேடம் பூண்டு வந்திருந்த ஐவருள் பார்த்தன் சூள் முடித்துப் பெண்ணை வென்ருன். பின் அப்போலிப் பார்ப்பார் துரோபதையைத் தன் தாயிருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்ருர்கள். தருமன் அங்கு முதலில் புகுந்து, தாம் ஒரு கனி கொணர்ந்திருப்பதாய்த் தாயிடம் சூதாகச் சொன்னுன். 'கொணர்ந்தால் ஐவரும் பொதுவாய் அதனை உண்மின்' எனச் சொன்னுள். பிறகு தன் மக்கள் கொணர்ந்தது கனியன்று, கன்னி எனக் கண்டு, குந்தி நொந்து தான் சொன்னதற்கு வருந்துகையில், தருமன் தங்கள் எண்ணமும் அதுவேயாதலால், தாய் வாய்ச்சொல் வீணுகாமல் துரோபதி ஐவருக்கும் பொதுமனைவி ஆவதுவே முறையென்று கூறி, அவளைத் தனஞ்சயனேடு தானுங்கூட மணந்து கொண்டான். அப்பழியைப் பிறர் எவரும் குடிக்கிழிவென்றெடுத்துக் கூறித் தடுக்கத் தருமனுக்கஞ்சித் துணியவில்லை. துணிந்திகழ்ந்த சுயோதனன் தருமனுல் கொடியோன் என வெறுக்கப்பட்டான். பிறப்பாலும் வரத்தாலும், துருபதன் சூளாலும் தனஞ்சயன் தாளாலும் அவன் ஒருவனுக்கே உரிய துரோபதி ஒருத்தியைத் தருமன் சூழ்ச்சியால் தனக்கும் உரியளாய்ஆக்கிக்கொண்டான். ஒருத்தியைப் பலர் தமக்குப் பொது மனைவியாய்க் கொள்ளப் பொருத்தமான விதி வழக்கெதுவும் உண்டா? நாடறியப் பீடழிக்கும் அக்கொடிய கூட்டுறவைப் பழிபாவமஞ்சாமல் சதிசெய்து முடித்துக்கொண்ட தருமன் தன் நெஞ்சுரமும் துணிவும் என்னே! 'இப்படி பெண்ணுசைமண்ணுசை எனுமிரண்டு துறைகளிலும் தப்பான உள்ளமொடு, ஒப்பனைக்கு நல்லவனுய் நடந்தவனைத் 'தருமன்' என்பது, கருநிறத்தொருவனை 'வெள்ளையப்பன்' என்றும், நச்சரவை 'நல்லது' என்றும் சொல்லுவது போலாமன்ரே?

★

# இலங்கையில் அர்த்தால்

[சிங்கள மொழிக்கு இருப்பது போன்ற உயர்வும் உரிமையும் தமிழ் மொழிக்கும் இருத்தல் வேண்டுமென்று செய்யப்பட்டுவந்த உரிமை வேட்கையைப் புறக்கணித்துச் சர்வாதிகாரப்போக்கில் நடந்துகொள்ளும் கொத்தலாவலை சர்க்காருக்குச் சரியான பாடம் கற்பிக்கும் முறையில் கடந்த 20—2—56ல் இலங்கையில் வட-கிழக்குப் பகுதிகளில் பொது வேலை நிறுத்தம் (அர்த்தால்) மிகமிக வெற்றிகரமாக நடந்திருக்கிறதென்ற செய்தி அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிருேம்.

ஈழத்தின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை இனிமேலாவது கொத்தலாவலை சர்க்கார் நிறைவேற்றி வைக்குமென்று நம்புகிருேம்.

கொழும்பில் இருந்து வெளியாகும் "சுதந்திரன்" இதழில் 20—2—56 அர்த்தாலைப் பற்றி வந்தவற்றின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது—ஆ-ர்.]

## திருகோணமலையில்

"ஹர்த்தால்" சமபந்தமாக பல திறபபடட துண்டுப் பிரசுரங்கள் இங்கு விநியோகிக்கப்பட்டன. "ஹர்த்தால் வேண்டாம்" என்ற தலையங்கமிட்டு வெளியிடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் பல பிரமுகர்களின் பெயர்களும் காணப்பட்டன.

"அரசாங்கத்தின் செயலைக் கண்டிக்க, ஹர்த்தாலே சரியான முறையாகும், தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக் கூட்டங்களைவிட சக்திவாய்ந்த மார்க்கம் இது" இக்கருத்து 1919ம் ஆண்டு கூறப்பட்ட கருததுக்கும் இந்தக் கருத்தைக் கூறியவர் உலகம் போற்றும் உததமர் காந்தி ஆவார். பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவானுலும் அதற்கு உத்தமர் காந்தியாரின் ஆதரவு கிடைததிருக்க முடியாது. நூற்றுக்கு நூறு பலாத்காரம அற்றது" என்று அவர் கருதிய காரணத்தால்தான ஹர்த்தால் கொள்கைக்கு அவர் ஆதரவு கிடைத்திருக்கிறது. அரசினர் மேற்கொளளும் நடவடிககைகள், ஒரு இன மக்களுக்கு அதிருபதி வேதனை ஏற்படுமானுல், அதனை அரசினருக்கு அறிவுறுத்தி—தங்கள் கண்டனத்தை தெரிவித்து, அரசினரை நல்வழிப் படுத்துவதற்கு பெரும் பொதுக்கூட்டங்களைவிட சக்திவாய்ந்த மார்க்கமான ஹர்த்தாலை மேற்கொள்ள வேண்டுமெனபது உத்தமரின் உளளக்கிடக்கை, பலாத்காரத்திற்கு உட்பட்ட முறையை எவ்வாறு ஆதரிக்க மாட்டாரோ, அதைப்போன்ற மக்களாட்சி நடைமுறைக்கு ஹர்த்தால் முரண்பட்ட ஒன்ருக இருக்குமானுல், அதையும உத்தமர் காந்தியார் ஒருக்காலும் ஆதரிக்க முன் வந்திருக்க மாட்டார், எனவே அவர் ஆதரவுக்கு பாத்திரமான "ஹர்த்தாலை நாம மேற்கொள்வது மக்களாட்சி முறைக்கு ஒத்ததே யாகும். இதன அடிப்படையில் தான திருகோணமலை தமிழரசுக் கட்சியினர் வெளியிட்ட "பிப்ரவரி—20" என்ற துண்டுப்பிரசுரம் நாம் ஹர்த்தாலை அனுஷ்டிக்க வேண்டும என்று வேண்டிககொணடது.

20—2—56 அன்று தமிழ்ப் பேசும் மக்களின் கடைகளும் தொழில் நிலையங்களும மூடிக் கிடந்தன பல இடங்களில் கருப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. விவேகானந்த சஙகத்தைச் சேர்ந்தவர்கள் அன்று கடற்றொழிலை மேற்கொளளவில்லை. இரணடு பாடசாலைகள், அன்று பள்ளிக்கூடம் நடத்தவில்லை. சில பள்ளிக்கூடங்கள் நடைபெற்ற போதிலும் மாணவர்கள் போதிய அளவு இலலை.

## தீவுப்பகுதியில்

ஹார்த்தாலனறு சரவணை ஜன சமூக நிலையத்தில் இருந்து, சோல்பரி அறிக்கை வைத்த பிரேதப் பெட்டி ஒன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. தீவுப் பகுதியே இதுவரை கண்டிராத அளவு பெருந்தொகை ஜனங்கள் கலந்துகொணடனர்.

## கொழும்பில்

ஹர்த்தாலுக்கு அனுதாபம் தெரிவிக்கும முகமாக அரசாங்க

சேவையாளரை அன்றைய தினம் அடையாளம் ஒன்றை அணிந்து செல்லவேண்டுமென ஈழத் தமிழ் கழகக் கூட்டு மன்றத்தினர் கேட்டுக்கொண்டிருந்தனர்.

இதன் விளைவாக கொழும்பில் உள்ள தமிழ் பேசும் அரசாங்க சேவையாளரில் அனேகம்பேர் கறுத்த கழுத்துப் பட்டியும் கறுத்த பூக்களையும் அணிந்து காரியாலயங்களுக்குச் சென்றனர், ஒரு சிலர் காரியாலயங்களுக்குப் போகாமல் இருந்தனர். இன்னும் சிலர் உண்ணாவிரதம் இருந்தனர். இதனால் அரசாங்க சேவையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் தமது தாய்மொழியில் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டிவிட்டார்கள். இது ஓர் மகத்தான வெற்றியென்றே கூறவேண்டும்.

## கிழக்கு மாகாணத்தில்

கிழக்கு மாகாணம் முழுவதும் ஹர்த்தால் நூற்றுக்கு நூறுவீதம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் மூலை முடுக்குகளெல்லாம் விசேஷ போலீஸ் கோஷ்டியினர் கண்ணீர்ப் புகையும்கையுமாகவே ரோந்து திரிந்தனர். ஆனால் குறிப்பிடத் தக்கதாக எவ்விதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. மட்டக்களப்பு பட்டினம் உட்பட பல பகுதிகளிலுமுள்ள பெருவாரியான கடைகள் மூடப்பட்டிருந்ததோடு கறுப்புக் கொடிகள் உயரப் பறக்கவிடப்பட்டிருந்தது. பெருவாரியான பள்ளிக்கூடங்களில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு மாணவர்கள் தென்படாததோடு சில இடங்களில் பாடசாலை மாணவர்கள் கறுப்புக்கொடியும் கையுமாகஊர்வலம் சென்றனர்.

மட்டக்களப்புப் பகுதியில் பஸ் போக்குவரத்து நடைபெற்றபோதிலும் பஸ்கள் பூராவும் காலியாகவே சென்றது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப் பகுதியிலுள்ள மீன் பிடிகாரர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால் மார்க்கட்டுகள் மூடவேண்டியதாக இருந்ததோடு காய்கறி அரிசிவேறு சாமான்களும் இதே கதிதான். வீதிகளில்கூட பாதசாரிகளைக் காண்பது துர்லபமாகவே இருந்தது. பல இடங்கள் பிரமாண்டமான பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

## வடமாகாணம் முழுவதும்

அதிகாலையிலிருந்தே நாடு முழுதும் ஒரே அமைதியில் அமுங்கிக் கிடந்தது. நகரில் நள்ளிரவு 12-மணிக்குப் பின் வியாபார நிலையங்களும் பொதுமக்கள் நடமாடும் இடங்களும் எவ்விதம் காட்சியளிக்கின்றனவோ அதுபோன்ற காட்சியைத்தான் காணக்கூடியதாயிருந்தது.

ஒரு சில இடங்களில் சிங்கள மக்களின் கடைகள் கூட மூடப்பட்டுவிட்டன. நகரைக்கூடத் தோற்கடித்துவிடும் வகையில் கிராமப்புறங்கள் இதுவிஷயத்தில் ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். கறுப்புக்கொடியிடாத மோட்டார் வண்டிகளையோ சைக்கிள்களையோ வீதியில் எங்குமே காணமுடியவில்லை. சந்திக்குச் சந்தி சவப்பெட்டிகளும் சர்ஜோனின் பொம்மைகளும் காட்சியளித்தன.

பெரும்பாலான பஸ் கம்பெனிகள் ஹர்த்தால் இயக்கத்துடன் ஒத்துழைத்தன. எதிர்மாறாக ஓடிய ஒரு சில கம்பெனிகள் பெரும் எதிர்ப்பைச் சமாளித்து ஓட முடியாமையினால் இடையிலே முயற்சியைக் கைவிட்டன. மக்கள் குரலுக்கு மதிப்பளிக்காமல் ஓட முயன்ற பருத்தித்துறை பஸ் கம்பெனிக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் பல தாக்கப்பட்டுச் சேதமடைந்தன. அவற்றை ஓடச் செய்வதில் செல்வாக்கிழந்த அரசியல் தலைவர் ஒருவர் பெரும் சிரத்தை காட்டினாராம்.

இந்த ஹர்த்தாலை முறியடிப்பதில் எதிர்கட்சிகள் மகத்தான ஏமாற்றத்தைக் கண்டனர். தொழிலாளர் சங்கங்களின் பேரால் எதிர்ப்பறிக்கை விட்டவர்கள் கூட அன்று தங்கள் கடைகளைப் பூட்டிவிட்டு நிம்மதியாக வீட்டிலிருந்தார்கள். சாப்புச் சிப்பந்திகள் சங்கத்தின் எதிர்ப்பறிக்கையைச் சாப்புச் சிப்பந்திகள் மதிக்காமல் ஹர்த்தாலில்கலந்துகொண்டார்கள்.

சகல பாடசாலைகளும் ஆசிரியர்களும் இது விஷயமாகப் பெரும் ஆதரவு தர மறுத்த கல்லூரி அதிபர்கள் சிலர் மாணவர்களின் வற்புறுத்தலுக்கு அடிபணியவேண்டியதாயிற்று. பொதுமக்கள் தம் உணவுப் பிரச்னையைக் கூட இது விஷயத்தில் மறந்துவிட்டார்களென்பதை ஆங்காங்கு பூட்டிக் கிடந்த கூட்டுறவுப் பண்டகசாலைகளும் மொத்தவிற்பனை ஸ்தாபனங்களும் எடுத்துக் காட்டின.

## பல இடங்களில்

சாவகச்சேரியிலுள்ள ஸ்ரீலங்கா பேக்கரியையும், கிளிநொச்சியிலுள்ள மற்றொரு பேக்கரியையும் தவிர ஏனைய முஸ்லீம், சிங்கள தமிழ் மக்கள் அனைவருடைய கடைகளும் மூடப்பட்டிருந்தன. பெரும்பான்மையான வீடுகளிலும் கடைகளிலும் கறுப்புக் கொடிகள் கம்பீரமாகப்பறந்துகொண்டிருந்தன.

இப் பகுதிகளில் ஓடிக்கொண்டிருந்த பஸ்வண்டிகளில் பிரயாணிகள் இருக்கவில்லை. சில கம்பனிகளுக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் நண்பகலுடனேயே நிறுத்தப்பட்டுவிட்டன. வட இலங்கை ஒயனி பஸ் கம்பனியைச் சேர்ந்த சில பஸ்களே சேவை செய்து கொண்டிருந்தாலும் அவைகள் சிலவற்றில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தன. ஏனைய கார், பைசிக்கள் முதலிய வண்டிகளில் தமிழரசுக் கொடிகளும் கறுப்புக் கொடிகளும் பறந்துகொண்டிருந்தன.

இத் தொகுதியிலுள்ள அனேக தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. சாவகச் சேரியிலுள்ள இரு கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் மட்டுமே சென்றிருந்தனர். மாணவ மாணவிகள் வெகு குறைவாகவே சென்றனர். மாணவர்கள் இல்லாததினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அரைநேரத்துடனேயே மூடப்பட்டது.

சாவகச்சேரியிலுள்ள தேவேந்திராப் படமாளிகையிலும் இரவு படம் காண்பிக்கப்படவில்லை. பல கடைகள் திறப்பிப்பதிலும், படம் ஓடச் செய்வதிலும் பல பாடசாலைகளை நடைபெறச் செய்வதிலும் இப்பகுதிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் ஒன்றும் பலனளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

மீசால புத்தூர் சந்தியிலும், மட்டுவிலிலும் கட்டியிருந்த கொத்தலாவலையின் பொம்மைகளை போலீசார் அறுத்துப் போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். போலீசார் தென்மராட்சித் தொகுதிமுழுவதும் பாராக்கொடுத்துக்கொண்டிருந்தனர்.

தெருக்களில் சுலோக அட்டைகளும் கறுத்தக்கொடிகளும் காட்சியளிக்கின்றன. ஹர்த்தாலை எதிர்த்துக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களின் பிரசாரம் சிறிதும் பலனளிக்கவில்லை. பொதுவாக 1953-ம் ஆண்டில் நடைபெற்ற அரிசி ஹர்த்தாலிலும் சிறப்பாகவே இந்த ஹர்த்தால் கொண்டப்பட்டதாகப் பலரும் கூறுகிறார்கள்,

★

# குணகடல் ராணி

K.A. மதியழகன்

— ப —

கிழக்குக் கடற்கரையில் தென்கோடியிலே ஓர் துறைமுகம். அலங்காரமான, பெரியதொரு கப்பல் ஈழத்துக்குப் பயணம் துவங்கும் நேரம் நெருங்கிவிட்டது கப்பல்வாணிபத் தொடர்புள்ளது போல்காட்சியளிக்கவில்லைகல்யாண வீட்டின் ஆரவாரம் கடலின் அலை ஓசையை எதிரொலித்தது. எழுநூறு இளம் பெண்கள் கப்பலுக்குள்ஏறித் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து விட்டனர். இன்னும் ஒருத்திதான் வர வேண்டி இருந்தது. அந்தப் பூங்கொடியும் ஒயிலாக வந்து உள்ளே அமர்ந்தாள்.

“பார்த்தால் பட்டத்தரசனின் மகள் போலல்லவா காட்சியளிக்கிறாள்.”

“ஆமாம் பட்டத்தரசியேதான். வைகை நாட்டான் பெற்றெடுத்த வனிதாரத்தினம். பாண்டிய நாட்டு பூங்குயில் பேடு. அந்த எழிற் கூட்டம் அவளது பணிப்பெண்கள்”

“எங்கே செல்கிறாள் இவ்வளவு கம்பீரமாக”

“அளது குனிந்த தலையும், கொவ்வை இதழின் ஓரத்திலே குவிந்திருக்கும் குறுநகையுமே கூறுகிறதே, எங்கே போகிறாள் என்று. இதை அந்தக் கோமகள் கூறியா, தெரிய வேண்டும்.”

“கொழுநன் வீடு செல்கிறாளாக்கும்”

“ஆமாம், அவளுக்கேற்ற ஆணழகன், ஆற்றலரசன், அரிமா நோக்குடையான், ஈழத்து வேந்தன் விஜயன் இவளது மணாளன்”

* * *

அகஸ்டஸ் மன்னனின் அத்தாணி மண்டபம், ரோம் நாட்டு இரணகளச் சூரர்கள் தத்தமது ஆசனங்களில் அமர்ந்துள்ளனர். வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் ஆசனங்கள் ஒன்றிலே ஓர் தமிழ் உருவம்.

“யார் இந்தத் தமிழறிஞர்?”

“பாண்டிய நாட்டின் தூதுவர் இவர்”

“மதுரை—ரோம்! எவ்வளவு இடைவெளி!”

“இதிலென்ன ஆச்சரியம்! இந்த மதிவாணர் மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான பாண்டிய நாட்டுத் தூதுவர்கள் ரோமாபுரியிலே உள்ளனர்”

“ஒரு தூதுவர் இருப்பது முறை; பல்லாயிரம் என்றால், புரியவில்லையே!”

“புரியாதுதான்! புரிந்திருந்தால் ஏன் கேட்கப்போகிறீர்கள். ஆழ்கடலில், மூச்சையடக்கி, முத்துக் குளிக்கிறார்களல்லவா, பாண்டிய நாட்டில்’

“ஆமாம்”

“அந்த முத்துக்கள் முழுதும் இங்கேதான், எங்கள் எழிலரசிகளின் அங்கங்களை அழகுபடுத்துகின்றன. ரோமாபுரி பாவைகளே பைத்யக்காரிகள். தங்கள் காதலர்களைக்கூடப் பிரிந்திருப்பர், தமிழகத்து முத்துக்கள் அவர்களின் நீங்காத் துணைவர்கள். அவர்கள் காதையும் கழுத்தையும், மார்பையும், காலையும் பார். எல்லாம் முத்து மயம்! பிளினி எனும் பெயராளன் ஒருவனைப்பற்றிக்கேள்விப்பட்டிருப்பாயே”

“ஆமாம், வரலாற்றுப் பேராசிரியன்”

“அவனே கோபித்துக்கொண்டிருக்கிறான், இவ்வளவு கோடிக் கணக்கிலே தமிழ்நாட்டு முத்துக்காக, இந்தக் கோமள வல்லிகள் கொட்டிக் கொடுக்கிறார்களே என்று.

“அந்தப் பூந்தோட்டத்திலே கணீர், கணீர் என்று ஓசை கேட்கிறதே, அந்த ஒலி”

“உனக்கு உறவான ஒலிதான். முத்துச் சதங்கையின் ஒலி.”

அந்த மோகனவல்லி அடிமுதல் முடிவரை முத்துப் பந்தர் வேய்ந்திருக்கிறாள்.”

“இதுவென்ன பிரமாதம், கிளாடியஸ் மன்னனின் மாதேவி—லொல்லா என்னும் லாவண்யவதி. பத்தரை மாற்றுப் பசும் பொன் போல் இருப்பாள். அவள் அணிந்திருந்த முத்துக்களின் விலைமூன்று இலட்சம் பவுன்கள்”

“மயக்கம் வருகிறது”

“கழுத்தை நீட்டிக்கொண்டிருக்கும் அந்தக் கலாப மயிலைப் பார்”

“கட்டழகன்—காரிகை — கலாப மயில்—என்ன பேசுகிறார்கள், அவ்வளவு சுவையாக,”

“ஜோடிப் புறாக்களுக்கு, சுவைக்கா பஞ்சம். அந்தச் சுந்தரன் கேட்டிருப்பான், சொர்ண பிம்பமே, அந்த மயிலுக்கு, அவ்வளவு நீண்ட அழகான கழுத்தைக் கொடுத்த இயற்கை, ஆரணங்குகளுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று”

“என்ன பதில் சொல்லியிருப்பாள் அந்த ஏந்திழை”

“பதில் சொல்லப் பாரதிதாசனை படித்திருக்கிறாள்—பக்கத்து வீட்டு இரகசியங்களைப் பார்த்தாலும்; மயிலைப்போல் மௌனமாய் வைத்துக் கொள்ளமாட்டார்கள் மகளிர். எனவேதான் குறுகிய கழுத்து என்று சொல்ல, பாரதிதாசன் தான் அப்போது எங்கே இருந்தார் அவள் தெரிந்து வைத்திருக்க, திருதிருவென்று முழித்திருப்பாள், மயில் தோகையின் ஆயிரம் கண்களைப் பார்த்து’’

“நானும் அப்படித்தான் விழிக்கிறேன். இங்கு நான் வந்தது சீசரைக் காண, ஆண்டனியைப் பார்க்க. நான் பார்ப்பதோ எங்கள் கடல் முத்து, கலாப மயில், கலவைச் சந்தனம்”

“தவறில்லை தம்பி, சீசர், ஆண்டனிதானே வேண்டும். அதோ வருகிறாளே, உல்லாசி, அவளிடம் பேசு, அவர்களெல்லாம் சமைந்த ஓர் உருவம் அவள். நான் வருகிறேன்”

……………

“யாரம்மணி, நீங்கள்!”

"நான் யாரா? சிரிக்கப் போகிறார்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் கேட்டால்; தெரியவில்லை, நன்றாக உற்றுப் பார்".

"நைல் நதியில் பூம்படகொன்றில், மென்காற்று வீச, துடியிடையார் புடைசூழ, நட்சத்திரக்கூட்டத்தின் மத்தியிலே ஒளிரும் வெண்மதி பவனி வருவதுபோல, அமர்ந்திருந்ததை டைபர் நதி முகத்துவாரத்தில், ரோம் நகரில் உனது ஆசை நாயகன் நிர்மாணித்துத் தந்த உல்லாச பவனத்தின் உப்பரிகையிலே நீ நின்று "போர்க்களத்திலே புலிகளாம் இவர்கள். போகக்களத்திலே எலிகளாயினர் என்னிடம் என்று இறுமாப்பை உமிழ்ந்ததை, ஈஜிப்ட் நாட்டின் வெண்மணற் பரப்பில், பிரமிட்களின் நிழலிலே, உன்னிடம உள்ளத்தைக் கொள்ளை கொடுத்த கட்டழகனுடன் காதல் விளையாட்டுகளில் களித்திருந்த காட்சியை, வாள் வலியால் இந்த வையத்தை என் தாளிலே பணிய வைப்பேன் என்று சூளுரைத்த சூரனிடம், என் வேல் விழியால் உன்னை வீழ்த்திவிட்டேன் என்று கம்பளத்திலிருந்து வந்த கட்டழகியாகப் புன்முறுவல் புரிந்ததை—, இன்னும் எத்தனையோ உனது விசித்திரங்களைப் பார்த்திருக்கிறேன். உன் பெயர் கிளியோபாட்ரா

"பொய், சுத்தப் பொய். நீ எங்கே அப்போது இருந்தாய்?"

"மெய்தான் அம்மணி, காலக் கண்ணாடியால் பார்த்திருக்கிறேன்",

"யார் கொடுத்தது அந்த அற்புதமான காலக் கண்ணாடி"

"நாடக வேந்தன் ஷேக்ஸ்பியர் அளித்தான்"

"என்னென்ன இரகசியங்களைச் சொன்னான்"

"வயதோ, காலமோ, உன் வனப்பின் எண்ணற்ற வர்ண ஜாலங்களை உலர வைக்காது; நீ அழியாத அழகு தேவதை என்றான்."

"குறும்புக்காரன், அவன் உனக்குச் சொல்ல மறந்த ஒரு இரகசியம் தெரியுமா?"

"எனக்கெப்படித் தெரியும்"

"என் அத்தான் தெரியுமல்லவா?"

"உனக்கு எத்தனையோ அத்தான்கள். எந்த அத்தானை நான் சொல்லுவது"

'தமிழகத்தாரிடம்நகைச்சுவைக்கு பஞ்சமே இருப்பதில்லை. சரி, என் ஆசை அத்தான் ஆண்டனியைப் பற்றித்தான் சொல்லுகிறேன். அவர்மீது எனக்கு அபார பிரேமை. அவரிடம் இழந்த பிரேமையைவிட அதிக பிரேமை, எனது காதணியை அலங்கரித்த தமிழ்நாட்டு முத்துக்கள் இரண்டினிடம். ஆண்டனிக்கும் எனக்கும் சச்சரவே நடந்தது உங்கள் முத்துக்களால். இவள் ஏன் இந்த முத்துக்களை மொய்த்துக் கிடக்கிறாள். என் சிரிப்பு சிந்தும் முத்துக்களில் சிந்தை சிலிர்க்க வேண்டிய சிங்காரி, இப்படிச் சித்ரவதை செய்கிறாளே என்பது அவரது குற்றச்சாட்டு. எனக்கோ உங்கள் முத்துக்கள் மீது ஒரே வெறி. யாரோ உங்கள் சாம்ராஜ்யாதிபதிகளுக்குச் சொந்தமான தாம் அந்த முத்துக்கள். எண்பது லட்சம் பவுன் மதிப்புள்ள முத்தை சாராயத்திலே கலக்கிக் குடித்துவிட்டேன். அவ்வளவு போதை எனக்கு. ஆண்டனியின் பணியாள் ஒருவன் தடுத்திராவிட்டால் மற்ற முத்துக்கும் அதே கதிதான். உனக்கு, காலக் கண்ணாடி சொல்ல மறந்த இரகசியம் இதுதான். எத்தனையோ பேரை நான் அடிமை கொண்டிருக்கிறேன். யாருக்கும் நான் அடிமையானதில்லை. பொல்லாத தமிழகத்து கடல் முத்துக்கள் என்னை அடிமைகொண்டுவிட்டன"

எனது திகைப்பு வளர்ந்தது. திரும்பிப் பார்த்தேன். ஒரு முதுபெரும கிழவர் நின்றுகொண்டிருந்தார். அவரே பேச ஆரம்பித்தார்.

"இந்தக் கிழவன் பேச்சு எங்கே ஏறபபோகிறது."

"இல்லை, பெரியவரே! தங்களை எனக்கு நன்றாகத் தெரியும்."

"வெறும் உபசாரத்திற்குச் சொல்கிறாய்"

"இல்லை, தாங்கள் கடியலூர், உருத்திரங் கண்ணனார்."

"பேர் கேட்டால் ஊரையும் சொல்கிறாயே"

"தாங்கள் மறந்துபோன எங்கள் நாட்டையே ஞாபகப்படுதியவர்கள். தங்கள் ஊரையும் பேரையும் மறந்தால்."

"மறந்துதான் விட்டீர்களே. இல்லாவிட்டால் ஏன் இந்த வேதனை."

"அப்படியல்ல, ஐயா! தாங்கள் காவிரிநாட்டான் கரிகாலனைப் பற்றித் தீட்டிய பட்டினப்பாலை"

"நல்ல வேளை இப்போதெல்லாம் கைலாயம், காகுத்தன் மனைவியின் கற்பு, கங்காவின் மழலை, கர்னனின் கொடை இவைகளிலேதானே கவலை. காவிரி நாட்டைப்பற்றி!"

"நன்றாக எங்கள் இதயத்திலே பதித்துக்கொண்டோம். தங்கள் எழுத்தோவியம் தீட்டிக்காட்டும் புகார் நகரம் எங்களுக்குப் புதுத்தெம்பைக் கொடுத்துள்ளது. பரதவர் பாக்கம், பட்டினப் பாக்கம், யவனர் இருக்கை, புலி இலச்சினை பொறித்த பாண்டங்கள், சீனர் உறைவிடம், ஈழத்துணவு, கடாரத்துப் பொருள்கள் குணகடல் பவளம், குடமலை தேக்கு, அத்தனையும் எவ்வளவோ இன்ப நினைவுகளைக் கிளறிவிட்டிருக்கிறது."

"பாராட்டுகிறேன், தம்பி, இருண்ட வானத்தில் எங்கே ஒளி தோன்றப் போகிறது என்று வருந்தியிருந்தேன். நம்பிக்கை நட்சத்திரம உதயமாகிவிட்டது. இந்தப பேரறிவாளர்களில் இவர்தான் சீத்தலைச் சாத்தனார். மற்றவர் மொழி நூல் புலவர். அவர்களிடமும் பேசு. நாட்டுக்குப் பயன் படும்."

"சீத்தலைச் சாத்தனாரா — செந்தமிழ்ப புலவர்—மாமலர் நெடுங்கண் மாதவி பெற்றெடுத்த காதற் கொழுந்து—மணிமேகலைக்கு சாகா வரம் கொடுத்த தயாளர். அந்த உத்தமி — ஊராளும் வேந்தனின் மைந்தன் உதயகுமாரன் — சோழ குல ஜோதி—நாட்டின் எதிர்கால மன்னன் உய்யான வனத்தின் பளிங்கு மண்டபத்திலே சந்தித்து "பாவாய், உன்னைப் பட்டத்தரசியாக்குகிறேன்" எனப் பாகுமொழி பேசியபோது அந்த உல்லாச வாழ்வு எனக்கு வேண்டாம் என உதறித்தள்ளி அறவாழ்வு மேற்கொண்ட அணங்காமே அவள். அந்த மணிமேகலை, ஜாவா நாட்டின் நாகபுரி மன்னன் ஆபுத்திரனை அலைகடலைக் கடந்து சந்தித்தாள் என்று எழுதியிருக்கிறீர்களே. அது வரலாறுதானே; வர்ணனையில்லையே"

"அதுமட்டுந்தானா உன்னுடைய வரலாறு. உனது வரலாறு வையம் பொறுமைப் படவேண்டிய தப்பா. மணிமேகலைமட்டுமா, எத்தனையோ தமிழ் மாலுமிகள் பர்மாப் பாதைகளைக் கடந்து, மலாய், சுமத்ரா,

ஜாவா சென்று மண்டிலங்கள் கண்டிருக்கின்றனர். சீனத்து நெடுஞ்சுவரின் நிழலிலே தமிழ் வணிகர் நிழல் கலந்திருக்கிறது. அந்த நெடுஞ்சுவர் பேசக்கூடுமானல் நீ இப்படிக் கேட்கும் சந்தர்ப்பமே எழுந்திருக்காது. இன்னும் கேள், தம்பி! பாண்டியநாட்டு அரண்மனையில் கிரேக்கநாட்டு வீரர்கள் மெய்க்காப்பாளர்களாகப் பணிபுரிந்தனர். முசிறித் துறைமுகத்தில் 2000 ரோமர்கள் தங்கக்கூடிய சிறிய ரோமாபுரியே சிருஷ்டித்து இருந்தனர். உலகுக்கும் உன் முன்னேருக்கும் இருந்த உறவுமுறை..." சாத்தனர் முடிக்கவில்லை; எனது முகத்தில் தென்பட்டது சந்தேக ரேகையா, சஞ்சல ரேகையா என்பது அவர்களுக்குப் புரியாமல் இருந்திருக்கவேண்டும். மொழிநூற் புலவர் குறுக்கிட்டார். அவரது வார்த்தைகளில் ஆழ்ந்த தமிழறிவு ஒளிவிட்டது.

"'திரைகடலோடியும் திரவியம் தேடு'—இதனைப் பழமொழி என்று கருதுகிருய். அன்றைய தமிழர், இதனை வாழ்க்கை வழியாகக் கொண்டனர்; வணிகக் கோமான்களாக விளங்கினர்! ஏழு கடல் சென்ருலும், 'ஏலேலன் கப்பல் இருப்பிடம் வந்து சேரும்' என்ற மொழிகளை நீ கேட்டதில்லையா, கடல், பரவை, புணரி, முன்னீர், கலம், மரக்கலம், மிதவை, கப்பல், ஓடம்—இவை யாவும் தூய தமிழ்ச் சொற்கள். வடமொழியிலேயிருந்து இரவல்பெற்றவையல்ல. கிரேக்கர்கள், அரிசியை ஒரிசா என்கின்றனர். இது அரிசியின் அடிப்படையில் எழுந்தது; விரிஹி எனும் வடமொழிச் சொல்லின் வேரிலிருந்தல்ல. பைபிளிலே மயிலைக் குறிக்க 'துக்கியம்' என்ற சொல் கையாளப்படுகிறது. தோகை என்ற சொல்லிலிருந்துதான் 'துக்கியம்' வந்திருக்கவேண்டும்" எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. புலவர் தொடர்ந்து பேசுவார்போல் தெரிந்தது. நல்லவேளை, கலகலவென்று நாணயங்களின் ஒலி காதில் விழுந்தது. அவரும் நிறுத்தினர். நான் நாணயங்களைக் கவனித்தேன். புலவருக்குத்தானே பேசத் தெரியும், நாங்கள் பேசுகிறோம் என நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு, நாணயங்கள் பேச ஆரம்பித்துவிட்டன. அவை கள்பட்ட அவசரத்தில் துண்டு துண்டாகத்தான் காதிலே விழுந்தது.

"நான் ரோமன் நாணயம், புதுக்கோட்டையிலே புதைந்து கிடந்தேன்"

"ரோமாபுரியிலே பிறந்தேன்; பொள்ளாச்சியிலே அடக்கம் செய்துவிட்டார்கள்"

"நான் வெள்ளலூரில் இருந்தேன். நான் கோட்டயத்தில் இருந்தேன்"

"நான் சீன நாணயம், நான் சிங்காரத் தமிழ் நாணயம். என் முதுகுப் பக்கம் பார் தோணியின் சித்திரம், துடுப்புகளால் தள்ளுவது போல் தீட்டப்பட்டிருக்கிறது. தோணி தோன்றிய காலத்திலேயே நான் இருந்திருக்கிறேன். அவ்வளவு வயது எனக்கு. கிழக்குக் கடற்கரை மணலிலேயே என்னைச் சிறை வைத்துவிட்டார்கள். சிற்றம் மிக்க பெருமழைதான் எனக்கு விடுதலை வாங்கித்தந்தது. அந்த பரதவச் சிறுவன் தன்கர ஸ்பரிசம் தான் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எனக்கு கிடைத்தது. இப்படி ஒருநாணயம் புலம்பியது. பணத்திற்கு சகலசக்தியும் உண்டு, அதற்கு பேசும் சக்தி இருந்ததிலே அதிசயமில்லை. மரக்கட்டையே பேச ஆரம்பித்தது. மரக்கட்டையே பேசுகிறது என்ருல் உணர்ச்சியின் உச்சக்கட்டம் என்றுதானே பொருள், "நான் தமிழகத்தின் மேற்கு மலையிலே வளர்ந்தேன். என் பெயர் தேக்கு. பல ஆண்டுகள் காற்றின் கீதத்தையும் களிறுகளின் காட்சியையும் கண்டேன். பின்பு என்னை வெட்டி எடுத்து ஊர்(Ur) எனும் இடத்துக்கு எடுத்துச் சென்றனர். ஊர்தான் பாபிலோனியாவைத் தலைநகராகக் கொண்ட சுமேரியர்களின் துறைமுகப்பட்டினம். காலதேவனின் அழிவுக்கரம் பட்டபோது மண்ணிலே புதைந்தேன். என்னைக் கவனிப்பாரே இல்லை. ஆனல் நான் மட்டும் நம்மவரை மறந்துவிடவில்லை. தமிழகம் எனது தாயகமாயிற்றே. அஸ்ஸீரிய மன்னர் நாலாவது சால்மனேசருக்கு கொங்குநாட்டுக்களிறுகளைப் பரிசாகக்கொடுத்தபோது குதூகலப் பட்டிருக்கிறேன், பாபுலோனியோ நகரத்தில் முதன் முதல் தமிழ் வியாபாரிகள் மயில் ஒன்று கொண்டுவந்தனர். வானத்தில் மேகங்கள் திரளும்போது மயில் நடனம் புரிவதைக் கண்டிருக்கிறேன். பாபிலோனியா மக்களோ வண்ணமயிலைக் கண்ட போதே கள்வெறி கொண்டு ஆடினர்" மரக்கட்டை நமக்கு உணர்ச்சி ஊட்ட வேண்டியுள்ளதே என உளம் நொந்தேன்.

சாணக்கியன் என் எதிரே நின்ருன். "உமது சம்சயம் நேக்குப் புரிகிறது" என்ருன்.

"ஐயா! மறையவரே, இங்கு சம்சயமும் இல்லை, சச்சரவும் இல்லை. இங்கு எந்த மகதத்தின் மணிமுடிக்கும் போட்டியில்லை நான் ஒன்றும் சந்திரகுப்தனல்ல."

"கோபித்துக்கொள்கிறீர்கள் எனது அர்த்த சாஸ்திரத்தில் தெக்ஷணத்தின் வியாபார பிரபல்யத்தை வர்ணித்திருக்கிறேன். தங்கம், வைரம், முத்து, சகல சௌபாக்கியங்களும் நிறைந்த இலட்சுமி கடாட்சம் பெற்ற பூமி என்று எழுதியிருக்கிறேன."

"கௌடில்யரே! உமது அர்த்தமும்வேண்டாம் சாஸ்திரமும் வேண்டாம். எனக்கு வேருேர் அர்த்தம் புரிந்துவிட்டது, அதற்கு வேண்டிய சாஸ்திரமும் தயார்" என்றேன் சாணக்கியனைக் காணேம்.

* * *

குமரி முனையில் நான் நின்றுகொண்டிருந்தேன். நீரலைகள் எனது பாதங்களை வருடிக்கொண்டிருந்தன நினைவு அலைகளிலே எவ்வளவு நேரம் சஞ்சரித்தேன் என்பதை உணர முடியவில்லை.

"என்னருந்திருநாடே! குணகடல் ராணி (Mistress of the Eastern Seas) எனறு குவலயம் உன்னைப் போற்றியதாமே, உன் குமரர்கள் வியாபாரக் கோமான்களாய், வீர வேந்தர்களாய் வெற்றிக்கொடி நாட்டினராமே, கடல் முத்து விற்ற இனம இன்று வேறுநாடுகளில் உடல் முத்து (வியர்வையை) விற்று வயிறு வளர்க்கிருர்களே, இது என் உடன் பிறந்தார் நிலை. இதற்கு விடுதலை, விமோசனம் எப்போது, தாயே!" எனக்கதறினேன். கத்தும் கடல் ஓவென அரற்றியது. அரற்றிக்கொண்டே இருக்கிறது. ★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் மேலும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

# உங்கள் நினைவிற் கொள்க!

## மத்திய ஆட்சியின் அதிகாரங்கள்:

1 இந்தியாவின் பாதுகாப்பு
2, 3, 4 கப்பல், விமான, தரைப்படைகளும், அதன் தொழில்களும், நிலப்படை நகரங்களும்
5, 6 வெடி மருந்துகள், அணுசக்தி, அதன் தாதுப் பொருள்.
7 நாட்டின் பாதுகாப்பிற்கும், போருக்கும் தேவையான தொழிற்சாலைகள்
8 மத்திய ரகசியத் தகவல் நிலையமும், புதிய கண்டு பிடிப்புகளும்
9. 10, 11 அயல் நாட்டு விவகாரங்கள்
12 ஐக்கிய நாடுகள் சபை
13 உலக நாடுகளின் மாநாடுகளில் பங்கு பெறுதல்
14 வெளிநாட்டு ஒப்பந்தம்
15 போரும் சமாதானமும்
16 வெளிநாடுகளில் தொடர்புகொண்ட அதிகார வரம்புகள்
17 குடி உரிமைகள்
18 மாநிலங்களைவிட்டு ஓடிய குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுத்தல்
19 இந்திய-வெளிநாட்டுப் போக்குவரத்திற்கான உறுதிச் சீட்டு
20 வெளிநாட்டுப் பயணங்கள்
21 கடலிலும் விமானத்திலும் நடத்தப்படும் குற்றங்கள்
22 நீராவி வண்டிப் பாதைகள்
23 நெடுஞ்சாலைகளைத் தேசீயச் சாலைகளாக மாற்றல்
24 உள்நாட்டுக் கப்பல், படகு போக்குவரத்து (பெருங் கால்வாய்கள்)
25 கப்பல் வாணிபத்தைப்பற்றிய கல்வியும் பயிற்சியும்
26 கலங்கரை விளக்கம்
27 பெரும் துறைமுகங்கள்
28 துறைமுக அதிகாரங்கள்
29 விமானப் போக்குவரத்தும், நிலையங்களும்
30 போக்குவரத்துச் சாதனங்கள்
31 தபால், தந்தி, கம்பியில்லாத் தந்தி, தொலை பேசி
32 நீர், நில சம்பந்தமான அரசாங்க சொத்துக்களும் வருமானமும்
33 அரசாங்கத்தின் தேவைக்காக தனி உடமைகளைக் கைக்கொள்ளல் (சொத்துக்களை ஆக்கிரமித்தல்)
34 சமஸ்தானங்களின் பாதுகாப்பு நீதிமன்றம்
35 அரசாங்கத்தின் பொதுக் கடன்
36 நாணயங்களும், நாணய மாற்றுதலும்
37 வெளிநாட்டுக் கடன்
38 அரசாங்க நிதி சேமிப்பு நிலையம் (ரிசர்வ் பாங்க்)
39 அஞ்சல் நிலைய நிதி சேமிப்பு நிலையம் (சேவிங்ஸ் பாங்க்)
40 மத்திய, மாநில சூதாட்டங்கள் (ரேஸ்)
41 வெளிநாட்டு வியாபாரமும், ஏற்றுமதி இறக்குமதி வரியும்.
42 உள் இராச்சியங்களின் வியாபாரம்
43 வியாபாரக் குழுக்களை, உருவாக்கலும் நீக்கலும்
44 பல்கலைக் கழகம் அல்லாத மற்ற குழுக்களின் விவகாரங்கள்
45 நிதி சேமிப்பு நிலையங்கள் (பாங்க்)
46 பண்டமாற்றுச் சீட்டுகள், பணமதிப்புச் சீட்டுகள், உறுதிச சீட்டுகள் (உண்டியல்)
47 உயிர்ப் பாதுகாப்பு நிதி (இன்ஸ்யூரன்ஸ்)
48 சேமிப்பு, மாற்றுதல், எதிர்கால் விலை முடிவுகள்
49 வியாபார உரிமைக் குறியீடுகள்
50 நிறை, நீட்டல் அளவைகள்
51 ஏற்றுமதி வரியும், விலை நிர்ணயமும்
52 தொழிற்சாலைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தல்
53 எண்ணெய்க் கிணறுகள், அதுபற்றிய சட்டங்கள்
54 சுரங்கங்கள், அதுபற்றிய சட்டங்கள்
55 எண்ணெய்க் கிணறுகளிலும், சுரங்கங்களிலும் வேலை பார்க்கும் தொழிலாளர் பாதுகாப்பு
56 ஆறுகள், பள்ளத்தாக்குகள்
57 கடற்கரைக்கு மிக அப்பால் மீன் பிடிப்பும், மீன் இலாக்காவும்
58 உப்பு உற்பத்தியும், வாணிபமும்
59 மயக்கந் தரும் பொருள்கள் (அபின்)
60 செய்திப் படக்காட்சி
61 மத்திய ஆட்சி அலுவலாளர் தகராறுகள்
62 பொது நூல் நிலையம், கண்காட்சிகள் (மத்திய ஆட்சியின் உதவி பெறுபவை)
63 டில்லி, அலிகார், பனாஸ், பல்கலைக் கழகங்கள்
64 விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் (மத்திய ஆட்சியின் உதவி பெறுபவை)
65 மத்திய ஆட்சியின் நேரடிப் பார்வையிலுள்ள பல்வேறு தொழிற் பயிற்சி ஆராய்ச்சிகள், விஞ்ஞான ரகசியங்கள்
66 தொழில் நுணுக்கக் கல்வி, அறிவியல் மேற்கல்வி
67 புதைபொருள்கள், நினைவுச் சின்னங்கள்
68 நில, தாவர, உயிரின, மக்கள் வளர்ச்சிக் கணக்கெடுப்பு, பௌதீக ஆராய்ச்சி நிலையம்
69 மக்கட் தொகை, கணக்கெடுப்பு
70, 71, மத்திய ஆட்சியின் அதிகாரிகளை நியமித்தலும், ஓய்வுச் சம்பளமும்
72 பாராளுமன்றம், மேல்சபை, ஜனாதிபதி, உபஜனாதிபதி தேர்தல், தேர்தல் குழு,
73 பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர்கள், சம்பளப் படி
74 சபைக் குழுக்களின் அதிகார வரம்புகள்
75 மத்திய ஆட்சியின் மந்திரிகள், ஜனாதிபதி, கவர்னர்கள், கணக்காயத் தலைவர், நிதிக்கணக்கெடுப்பாளர் இவர்கள் சம்பளம், படி, உரிமைகள்
76 மத்திய-மாநில ஆட்சிகளின் கணக்கு மேற்பார்வை
77 உச்சநீதி மன்றம்
78, 79 மாநில தலைமை நீதிமன்றங்கள், உரிமைகள்
80 ஊர்க்காவல் நிலையத்தினரின் வெளிமாநில அதிகாரம்,
81 இராச்சியங்களுக்குள் மக்கள் குடியேறுதல்
82 வருமான வரிகள் (விவசாயம் தவிர)
83 சுங்கவரி (ஏற்றுமதி வரியோடு)
84 புகையிலை வரி (சில மயக்கந்தரும் பொருள்களும்)
85 உற்பத்தி, வாணிபம் முதலிய கூட்டுக் குழுக்கள் மீது வரி
86 சொத்துரிமை வரி(விவசாயம் தவிர)முதலின் மீதுவரி
87 மரண வரி
88 வாரிசு வரி (விவசாயம் தவிர)
89 போக்கு வரவு வரி, ரயில்வே கட்டணத்தின் மீது வரி
90 பண்டமாற்று வரி
91 பங்கு, செக், பாலிசி முதலியன மாற்றுதல்
92 செய்தித்தாள் விற்றல், வாங்குதல், விளம்பரம் இவைகள் மீது வரி
93 மேற்கண்டவைகள் தகராறு தீர்க்கும் அதிகாரம்
94 மேற்கண்டவைகளின் கணக்குப் பரிசீலனை விசாரணை
95 மேற்கண்டவைகளுக்கான நீதிபதிகளும், நீதி மன்றங்களும், அதிகாரங்களும்
96 மேற்கண்டவைகளுக்கான செலவுத் தொகை
97 இராச்சிய—மத்திய ஆட்சிகளின் அதிகாரங்களில் விட்டுப்போன அதிகாரங்கள், வரிகள் அத்தனையும்.

## இராச்சிய அதிகாரங்கள்:

1 பொது ஒழுங்கு
2 ஊர்க்காவல் நிலையங்கள் (இரயில்வே உட்பட)
3 நீதி மன்றங்களும், அதிகாரங்களும் (உயர், உச்ச நீதி மன்றங்கள தவிர)
4 சிறைகளும், கைதிகளும்
5 நகர, மாவட்ட ஆட்சி
6 பொதுச்சுகாதாரம், மருத்துவச்சாலைகள், இல்லங்கள்

7 உள்நாட்டு யாத்திரை
8 மயக்கம் தரும் மது வகைகள்
9 ஊழி மானவர்கட்கு உதவி
10 சுடுகாடும், புதைவிடமும்
11 கல்வி (பல்கலைக் கழகம் உட்பட)
12 நூல் நிலையம், பொருட்காட்சி, சாசனங்கள் (மத்திய ஆட்சிக்கு உட்படாதவை)
13 சாலைகள், பாலங்கள், படகு, மின்னூர்தி (டிராம்) கால்வாய் (உள்நாட்டு) போக்கு, வரத்து
14 விவசாயம், அதுபற்றிய கல்வி, ஆராய்ச்சி, நோய் தடுப்பு
15 கால்நடைகளின் பாதுகாப்பும், பயிற்சியும்
16 பட்டிகள்
17 விவசாயத்திற்கான பாசன வசதிகள், நீர்த் தேக்கம், நீர்ச் சக்தி
18 நில உரிமைகள், முறைகள், நில மாற்றம், கடன்
19, 20 காடுகள், கொடிய மிருகங்கள், பறவைகள், பாதுகாப்பு
21 மீன் பிடித்தல்
22 இளங் குற்றவாளிகள் நீதிமன்றம்
23 சுரங்க விதிகள் (சில உரிமை)
24 தொழிற்சாலைகள் (சில உரிமை)
25 எரிவாயுவும், அதன் உரிமைகளும்
26, 27 இராச்சியத்திற்குள் வாணிப முறை, உற்பத்தி, விற்பனை
28 விலை நிர்ணயமும், சந்தைகளும்
29 எடைகள், அளவைகள் (நிலையானவை தவிர)
30 கடன், விவசாயக் கடன்கள், கடன் கொடுப்போர்
31 சத்திரங்கள்
32 இலக்கிய, விஞ்ஞான, மத, சமூக, கூட்டுறவு கழகங்கள் (மத்திய ஆட்சிக்கு உட்படாத)
33 பொழுது போக்கு சாதனங்கள் (நாடகம், படம், போட்டி, கூத்து)
34 பந்தயங்கள், சூதாட்டங்கள்
35 நிலங்கள் கட்டிடங்கள், தொழில்கள்
36 சொத்துரிமைகளை ஆக்ரமிப்பு
37 இராச்சிய சட்டசபைக்கான தேர்தல்கள்
38, 39, 40 இராச்சிய மந்திரிகள், சட்டசபை, மேல்சபையில் அங்கத்தினர்கள், தலைவர், உபதலைவர்கள், சபாநாயகர்கள் சம்பளப்படி, அதிகாரங்கள்
41 இராச்சிய ஆட்சி அலுவலகங்கள், அதற்கு ஆள்கள் தேர்ந்தெடுக்கும் குழு
42 ஓய்வுகால ஊதியம
33 இராச்சியப் பொதுக்கடன்
44 புதையல்
45, 46 நிலவரி, விவசாய வருமான வரி
47 விவசாய நிலங்களின் வாரிசுதாரர்களின்மேல் வரி
48 மரணவரி (விவசாய நிலம் மாத்திரம்)
49 வீட்டுவரி, (நிலங்கள், கட்டிடங்கள்)
50 கனிப்பொருள் உடமைகளின் வரி
51 மதுச்சார வரி, (மக்கள் உபயோகம்)
52 இராச்சிய எல்லைக்குள் வரும் பொருள் மீது வரி (உபயோகம், விற்பனை)
53 மின்சார வரி, (உபயோகம்—உற்பத்தி)
54 செய்தித்தாள் தவிர, மற்றவைகளை விற்க-வாங்க வரி
55 விளம்பர வரி, (செய்தித்தாள் விளம்பரம் நீக்கி)
56 பிரயாணவரி (நிலம், நீர்)
57 வாகன வரி
58 மிருகவரி, படகு வரி
59 சுங்கம்
60 தொழில் வரி
61 தலைவரி
62 பொழுதுபோக்கு வரி, (தமாஷா வரி)
63 பத்திர வரி
64 அரசாங்க சட்டங்களை அவமதித்தல்
65 நீதிமன்றங்களின் அதிகாரங்களும், வரம்புகளும் (உச்சநீதி மன்றம் தவிர)
66 எந்த நீதிமன்றத்திலும் வேண்டப்படும் கட்டணங்கள் தவிர. மற்ற இந்த பட்டியலில் கண்டுள்ள எந்தத் தகவலையும் பொருத்த கட்டணங்கள்

## மத்திய—மாநில ஆட்சிகளின் பொது அதிகாரங்கள்:

1 குற்ற வழக்குச் சட்டம்
2 குற்ற இலாக்கா நிர்வாகம்
3 இராச்சியங்களை பொது சட்டத்தினால் நல்வழிப் படுத்துதல், நிர்வகித்தல், சமுதாயத்திற்குத் தேவையான பொருள் மீது ஆதிகாரம் செலுத்துதல்
4 இராச்சியத்திலிருந்து இராச்சியத்திற்கு கைதிகளைக் கொண்டு போதல்
5 விவாகம், ரத்து, பாகப் பிரிவினை, முதலான விவகாரங்களும், ஆவணப் பதிவு செய்தலும
6 சொத்துக்களை விற்றல், வாங்கல் ஆவணப் பதிவு (விவசாயம் தவிர)
7 முன் பணம் போட்டு வேலைசெய்து பிறகு அரசாங்கத் திடம் பெறுதல் (காண்ட்ராக்ட்)
8 நடவடிக்கைக்குரிய குற்றங்கள்
9 கடன் தீர்க்க முடியாத கடனாளி, ஏமாற்றல்
10 செல்வமும், பாதுகாவலரும்
11 உயர்தர அதிகாரிகள்
12 பொதுச் சட்டங்கள், வழக்கு மன்றங்கள், சாட்சிகள்
13 நீதி மன்றங்கள் (குற்ற வழக்கு தவிர)
14 நீதிமன்ற அவமதிப்பு
15 நாடோடிகள், நாடில்லாத ஆதிக் குடியினர்
16 பைத்தியக்காரர்கள்
17 ஜீவகாருண்யம் (மிருகங்களிடம்)
18 உணவுப் பொருள்களில் மோசடி
19 மருந்துகள், விஷம்
20 சமுதாய, பொருளாதாரத் திட்டங்கள்
21 இயந்திரசாலை, வாணிபம் ஆகியவைகள் ஆதிக்கம், குழுக்கள்
22 தொழிலாளர் சங்கங்களும், தகராறுகளும்
23 சமுதாய, தொழிலாளர், வேலையற்றோர் பாதுகாப்பும், பாதுகாப்பு நிதியும்
24 தொழிலாளர் வேலை, நஷ்ட ஈடு, ஓய்வுநேர ஊதியம், சேமிப்பு உதவி நிதி முதலியன
25 தொழிற்கல்வி பயிற்சி
26 சட்ட, மருத்துவ தொழிற் கல்வி
27 அகதிகள் பாதுகாப்பு
28 அற நிலையங்கள்
29 தொத்துநோய்கள் (இராச்சியத்திற்கு இராச்சியம் பரவாமல் தடுத்தல்)
30 பிறப்பு, இறப்பு கணக்கெடுப்பு
31 துறைமுகங்கள் (பெரியவை தவிர)
32 கப்பல், படகு போக்குவரத்து (கால்வாய்களில்)
33 தொழிற்சாலைகளில் பொருள்களை விற்பது, வினியோகிப்பது
34 விலைவாசி நிர்ணயம்
35 இயந்திர சுழற்சி வண்டிகள்
36 சிறு தொழிற்சாலைகள்
37 பாய்லர்கள்
38 மின்சாரம்
39 புத்தகம், அச்சுக்கூடம், செய்தித்தாள்
40 பொருள் ஆராய்ச்சி நிலையங்கள் (மத்திய ஆட்சியிலுள்ளது தவிர)
41 அகதிகள சொத்துப் பாதுகாப்பு வினியோகம்
42 அரசாங்க ஆக்ரமிப்புச் சொத்துக்களுக்கு விலை நிர்ணயித்தல்
43 இராச்சியத்திற்கு வெளியில் வரி வசூலித்தல்
44 முறிவரி (நீதிமன்ற வரி தவிர)
45 முதல், இரண்டாவது வரிசைகளில் சொல்லப்பட்டவைகள்பற்றிக் கணக்கெடுப்பும், வரி விதித்தலும்
46 இந்த வரிசையிலுள்ள அதிகாரங்கட்கு நீதிமன்றத்தின் தீர்ப்புகள்.
47 இந்த வரிசையில் வருவதற்கான கட்டணம் (நீதிமன்றத்தின் வரி தவிர) ★

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

என்று ஏஜண்டுகளை, முன்னாலே அறிக்கை மூலம் அழைத்தது. எக்ஸ்பிரசோ, 3-30க்கே வந்துவிடுக என்று ஏஜண்டுகளை அழைத்தது, அறிக்கை வெளியிட்டு. பிப் 20 அர்த்தால் வெற்றியுடன் நடைபெறப்போகிறது என்பது, 'இந்து' 'எக்ஸ்பிரஸ்' ஆகிய இதழ்களுக்கு முன்கூட்டியே தெரிந்து விட்டது. ஆனால் 'மிடுக்கும்முடுக்கும்' குறையலாமா!! அதனால் அர்த்தாலை அலட்சியப் படுத்துங்கள் என்று மக்களுக்கு மட்டும் எடுத்துக்கூறி வந்தன.

* * *

மொழிவழி அரசு பிரச்சினை சம்பந்தமாக, என்னசெய்வது என்பது தெரியாமல், சர்வகட்சிக் கூட்டணியினர் திண்டாடிப்போய், எதையாவதுசெய்வோம் என்று இந்த அர்த்தாலில்ஈடுபட்டதுபோலவும், அவர்களுக்குச் சிறிதளவு தெளிவைத் தன் மேதா விலாசத்திலிருந்து எடுத்தளித்தால் போதும் என்று எண்ணிக்கொண்டும், 'தினமணி' எழுதிற்று.

"தமிழர் சம்பந்தப்பட்ட வரையில் தமது கோரிக்கைகளைத் தெரியப் படுத்துவதற்கு ஜனநாயக வசதிகள் நிறைய இருக்கின்றன, கூட்டம் போடுவது, விவாதம் நடத்துவது, தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்புவது முதலியவைகள் தாம் சகஜமாகப் பின்பற்ற வேண்டிய முறைகள்"

பார், தம்பி. பார்- அட்-லாபடித்து அமைச்சர் வேலை பார்த்தும் பி. டி. ராஜனுக்கு, "முறை" தெரியவில்லை!

தமிழர்நலனில் அக்கரைகாட்டியதற்காகவே, வேட்டையாடி வாட்டப்பட்டும், இன்னமும்காங்கிரசிடம் கனிவுகாட்டுபவரான, ம. பொ. சிக்குத் தெரியவில்லை!

மற்றும் ஜீவா, அந்தோணிப்பிள்ளை, சின்னத்துரை, இவர்களுக்கெல்லாம், கோரிக்கைகளை எப்படித் தெரியப்படுத்துவது என்ற சாதாரண விஷயம் தெரியவில்லை.

இதய நாதத்தையும் இயற்கை எழிலையும், தமிழ்ப்பண்பையும்கலைச் செறிவினையும் கண்டறிந்துகவிதை வடிவாக்கித் தரும் பாரதிதாசனுக்கு இது தெரியவில்லை.

'தினமணி'க்குத் தெரிகிறது— தெரிந்து, இவர்களுக்கெல்லாம் அருளுகிறது— கனியிருக்கக் காய்கொள்கிறீரே, கருத்தற்றோரே! கருத்தற்றோரே! கோரிக்கையைத் தெரியப்படுத்தும் வழி தெரியாமல் திண்டாடித் தவித்து திறந்திருக்கும் கடைகளை மூடச்சொல்கிறீர்களே, தெளிவற்றோரே! என்னைக் கேட்கக்கூடாதா! சரி, இதோ கூறுவேன் கேண்மின் கோரிக்கைகளைத் தெரியப்படுத்த',

**கூட்டம்போடலாம்**

**விவாதம் நடத்தலாம்**

**தீர்மானம் நிறைவேற்றலாம்**

**தீர்மானங்களை அனுப்பலாம்.**

இவைபோதும்—என்கிறது.

அன்றிரவு ஆசிரியர் ஆனந்தமாகத் தூங்கி இருப்பார் என்று



எண்ணுகிறேன். நாட்டுக்கு வர இருக்கும் ஒரு நெருக்கடியை ஒரு தலையங்கமூலம் தடுத்துவிட்டோம், இதற்காக, 'பத்மவிபூஷண்' நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்திருப்பார். தம்பி, கனவிலே கலாராணி வைஜயந்தி நாட்டியம் கண்டிருப்பார்—விருந்து வைபவம் பட்டமளிப்புக்காக நடைபெறுமல்லவா! அரிய பெரிய உண்மையை, அந்தகாரத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் சர்வகட்சிக் கூட்டணியினருக்கு அளித்துவிட்டோம், இனி அர்த்தால் இராது என்று எண்ணிப பூரித்திருப்பார். ஒரு சமயம் இவ்வளவு அரிய பேருண்மையைக் கேவலம் ஒரு அணாவுக்கு விற்றுவிட்டோமேஎன்றெண்ணி வருத்தப்பட்டாரோ என்னவோ, அப்படியும் இருக்கலாமல்லவா! எப்படியோ ஒன்று அர்த்தாலை நிறுத்திவிட, அவருக்குத் தெரிந்த காரணத்தைக் காட்டினார்.

ஏன், இந்த ஜனநாயக முறை இருக்க, சர்வகட்சிக் கூட்டணி 'அர்த்தால்' திட்டமிட்டது? கூட்டம் போடலாம், தீர்மானம் நிறைவேற்றலாம், அவைகளை அனுப்பி வைக்கலாம் என்றல்லவா 'தினமணி' கூறுகிறது. இவைகளைச் செய்யாமல், வேலைக்குச் செல்லாதீர் கடைகளைத் திறவாதீர் என்று ஏன் சர்வகட்சிக்கூட்டணி கூறிற்று?

ஜனநாயக முறைகளில் நாட்டமற்றதாலல்ல; திறனற்றுமல்ல; அந்த முறைகள் யாவும் செய்து பார்த்தாகிவிட்டது. யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது! ஆமாம், தம்பி! ஒரு பிரபல தமிழ் இதழாசிரியரின் 'வாக்கை' எடுத்துக் கையாண்டிருக்கிறேன். அவர் தான், தமிழ்மக்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளைப் பல வழிகளிலும் எடுத்துக் கூறினர், மத்திய சர்க்காரிடம்; எனினும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது என்றார்.

"ராஜ்ய சீரமைப்புக்கமிஷன் சிபாரிசுகள்மீது இந்திய சர்க்கார் அறிவித்துள்ள முடிவுகள், தமிழர் சம்பந்தப்பட்டவரை, அநீதியாகவே இருக்கின்றன. அடுத்தாற்போல் உள்ள ராஜ்யங்களில் தமிழர் பெரும்பாலோராயுள்ள பகுதிகள் (பீர்மேடு, தேவிகுளம்உட்பட) சென்னை ராஜ்யத்தில் சேரவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை தமிழகம் ஒரு குரலில் கேட்டது. இதை இந்திய சர்க்கார் **அடியோடு நிராகரித்து விட்டனர்.** எல்லாக் கட்சிகளும் இதை வற்புறுத்தின. அரசியலுக்குப் புறம்பாகவுள்ள பல ஸ்தாபனங்களும் ஒருமித்து இதைக் கேட்டன. சட்டசபையின் இருமன்றங்களும் இதை மிகப் பெரிய மெஜாரடியுடன் கோரின. அநேகமாக எல்லா நகரசபைகளும் ஜில்லா போர்டுகளும் இந்தக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றின. மேலும் ராஜ்ய சர்க்காரும் போதிய புள்ளி விவரங்களுடனும், ஆதாரங்களுடனும், நிதானம் தவறாமல், இந்தக் கோரிக்கைக்கு இணங்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டனர். இராஜ்ய மந்திரிகளும் பல்வேறு ஸ்தாபனத்தினரும் டில்லி சென்று பன்முறை நியாயம் வழங்குமாறு வேண்டினர். இம்மாதிரி தமிழகம் ஒருமித்துக் கேட்டும் பயனில்லை.

**எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது."**

தமிழர், ஜனநாயக முறைகளைக் கையாண்டது வீணாகிப்போனது, இவ்விதம் விளக்கப்படுகிறது. இந்த 'விவேகி'யார் என்கிறீர்களா?

அர்த்தால் எதற்கு? கூட்டம்போடலாமே தீர்மானம்நிறைவேற்றலாமே ஜனநாயக முறை எவ்வளவோ இருக்கிறதே அவைகளை விட்டுவிட்டு, அர்த்தால் ஏன் ஏற்பாடு செய்கிறார்கள் என்று நமக்கெல்லாம், நாட்டுக்கெல்லாம் 'புத்தி' கூறினாரே, அதே 'விவேகி'தான், இப்படியும் எழுதினார்; இதைக் கூறினவரும் தினமணி ஆசிரியர் தான்!

ஜனநாயக முறைகளைத் தமிழர்கள் கையாண்டனர்; கூட்டம்போட்டனர்; தீர்மானம் நிறைவேற்றினர்; மேலிடம் அனுப்பிவைத்தனர்.

தமிழரின் ஆட்சியாளர்களாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியும், இதே ஜனநாயக முறைகளைச் செய்தது.

கக்கனே, எடுத்தார் பேனாவை எழுதினார் காகிதத்தில், விடுத்தார் அறிக்கை, விடமாட்டோம் தேவிகுளம் பீர்மேட்டை என்று. 'மணி மகுடம் தரித்துக்கொண்(டு)ள்ள ஏழைகளின் பாதுகாவலர்' இருக்கிறாரே காமராஜர் (விடுதலை தரும் விருது') அவரும் நாட்டுக்கு வாக்களித்தார், நானிருக்கிறேன்—கவனித்துக்கொள்கிறேன் என்று. இந்தஜனநாயக முறை யாவும் செவிடன் காது சங்காயிற்று! பிறகே, கூட்டணி அர்த்தால் நடத்தத் திட்டமிட்டது!

* * *

தமிழரின் முகத்தில் பொதுவாகவும், காங்கிரசார் முகத்தில் குறிப்பாகவும், காமராஜர் முகத்தில் சிறப்பாகவும்,டில்லி கரிபூசிய 'கண்ணுவி'க் காட்சியைக் கண்ட பிறகுதான், கூட்டணி, டில்லியின் போக்கையும நோக்கையும் மாற்றக்கூடிய வேறுமுறை தேடலாயிற்று: காந்தியார் அருளிய அறிவுரை நினைவிற்கு வந்தது, எனவே 'அர்த்தால்' நடத்தத் தீர்மானித்தது.

செவிடன் காதிலே மேலும் சங்கு ஊதுங்கள் என்கிறது தினமணி; மக்கள், மதிநுட்பமுள்ளவர்கள்; அவர்கள் ஆசிரியர்களாக இல்லாதிருக்கலாம், அங்காடியிலோ, வேறு ஏதேனும் அலுவலிலோ ஈடுபட்டிருக்கக்கூடும், எனினும் அவர்களுக்கு, புரட்டு ..து, புல்லர்யார், எனபனவற்றைக் கண்டறியும் திறன் இருக்கிறது; சிற்சில சமயங்களிலே இத்திறன் பழுதுபட்டுவிடுகிறது எனினும் அடியோடு பட்டுப்போய்விடவில்லை இந்த உண்மையை உணராமல், எதைச் கூறினாலும் நம்பிவிடும் ஏமாளிகள் இந்த மக்கள் என்று எண்ணிக்கொண்டு, இறுமாந்த நிலையில் இருப்பதால்தான் ஜனவரி 18-ல் தமிழரின் ஜனநாயக முயற்சி யாவும் செவிடன் காதுக்கு சங்குபோலாகிவிட்டது, என்று இடித்துரைத்தோமே, அதற்கான காரணமும் விளக்கிக் காட்டினோமே, அதைப் படித்த அதே மக்களிடம், பிப்ரவரியில், அர்த்தால் கூடாது, ஜனநாயக முறைகள் உள்ளன என்று கூறுகிறோமே என்ன எண்ணிக்கொள்ளுவார்கள் மக்கள். வேளைக்கொருபேச்சா? நாளைக்கு ஒரு நோக்கமா? என்று கேலி பேசமாட்டார்களா? நமது அறிவுடைமை பற்றியேகூடச் சந்தேகிக்கமாட்டார்களா? என்பது பற்றி எல்லாம் துளியும் எண்ணிப்பார்க்காமலேயே, 'தினமணி' எழுதிற்று—எனவே, என்ன மதிப்பு தரவேண்டுமோ அதைத் தந்தார்கள் மக்கள் — பொட்டலத்துக்கு, ஏற்ற காகிதமாகக்கொண்டனர், தமது போக்குக்கு வழிகாட்டும் ஆசானாகத் தினமணியைக் கொள்ளவில்லை. எனவே தான்,



அர்த்தாலை மக்கள், வெற்றிகரமாக்கினர். தம்பி, நம்மிடம் வெறுப்புணர்ச்சிகொண்ட பெரியவர்கள், நடமாடும் நாசம்—வலைவீசும் வன்கணாளர் — வயிற்றுப் பிழைப்புக்காகவே பொதுவாழ்வில் இருப்போர்—வஞ்சகர்—சூதகர்கள் என்றெல்லாம் நம்மைப்பற்றி எண்ணிக்கொண்டும் கூறிக்கொண்டும் வருபவர்கள், நாம் ஈடுபட்ட காரணத்தாலேயே சர்வகட்சிக் கூட்டணியையே அலட்சியப்படுத்தவும், எதிர்த்துப் பேசவும் முற்பட்டனர்—காங்கிரஸ் ஏடுகளெல்லாம் கூட, ஒரே அடியாக உண்மையை எப்படி மறைப்பது என்று திகைத்தது கண்டு இது என்ன கஷ்டம்? என்னைப் பாருங்கள், முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கிறேன் என்று கூறுவதுபோல, அர்த்தால் வெற்றி பற்றி இருட்டடிப்புச் செய்து காட்டவும் முனைவந்ததுடன் இப்போது, அர்த்தாலைக் காலித்தனம் என்றும் போலித்தனமென்றும், தேர்தல் சூது என்றும் தெளிவிலாதாரை ஏய்த்துவிட்டனர் என்றும் ஏதேதோ பேசுகின்றனர். இதுவரை தமிழகம் கண்டிராத அளவு வெற்றிகரமான அர்த்தால் நடைபெற்றது — கண்டோர் வியந்தனர்—பிறர்பற்றி என்ன, தம்பி! நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடவைத்தது.

20-ந் தேதி பகல் பதினொரு மணி இருக்கும்—நான் வெளியே எந்த அளவுக்கு வெற்றியோ என்ற கவலையுடன், மூலையில் முடங்கிக் கிடந்தேன்—நண்பர் W. K. தேவராசனார் மோட்டார்கிடங்கில்! தமிழரசுக்கழகக்கொடியும் தி.மு.க.கொடியும் கட்டப்பட்டிருந்த ஒரு மோட்டார் வான் வந்து நின்றது — பழந்தமிழ்ப் போர்வீரர் போன்ற உடலும் பரிவும் பண்பும் ததும்பும் உள்ளமும்படைத்த என் நண்பர் உமாபதி — தமிழரசுக் கழகம் — அண்ணா! என்று கூறிக்கொண்டே கீழே இறங்கினார். அவர் முகத்தில் வெற்றிக் களை கண்டேன் — எளிதில் களிப்புப் பெறாத இயல்பினரல்லவா நமது பொதுச்செயலாளர், அவரும் வெற்றி! வெற்றி! என்று கூறியபடி உடன் வந்தார் — எதிர்பார்த்ததைவிட அதிகம், ஆமாம், பரிபூரணக்கடை அடைப்பு என்றார் ம. பொ. சி. வந்து பாருங்களேன் அந்தக் காட்சியைத்தான் என்றழைத்தார் தோழர் விநாயகம்; அண்ணாவுக்கு எப்போதும் இப்படித்தான் குழப்பம், சந்தேகம் என்று கேலி பேசினார், நடராசன்;

கடைகளெல்லாம்...?

**எல்லாக் கடைகளும்!**

மவுண்ட்ரோடு?

**ஒரு கடை கிடையாது!**

சைனாபஜார்?

**சம்பூரண வெற்றி!**

*மூர்மார்க்கட?*

**திறக்கவே இல்லை!**

*திருவல்லிக்கேணி?*

**நிசப்தம்!**

*மைலாப்பூர்?*

**ஒரு கடை இல்லை!**

*தியாகராயநகர்?*

**வந்து பாருங்கள், வெற்றியை!**

*கலகம்? குழப்பம்?*

**எல்லாம் காமராஜர் மனதோடு சரி! ஊரில் எங்கும் உணர்ச்சி மயம் உற்சாக மயம்!**

*ஆலைகளில் நிலைமை?*

**அந்தோனிப்பிள்ளையின் அபாரமான சாதனையை வந்து பாரப்பா, ஆச்சரியப் படுவாய்!**

*தீப்பெட்டி தொழிற்சாலை?*

**மூடிக்கிடக்கிறது!**

*கல்லூரிகள்?*

**திறந்துள்ளன—மாணவர் அணிவகுப்பு நெடுஞ்சாலைகளில்!**

*கொத்தவால்சாவடி?*

**கீரைவிற்கும் கிழவி கூட அங்கு இல்லை!**

*அப்படியானல்......?*

**அப்படியாவது, இப்படியாவது — நம்மால் இவ்வளவு சாதிக்க முடியும் என்று நேற்று யாராவது கூறியிருந்தாலும் நம்பமாட்டோம் - இப்போது பார்த்தாலல்லவா, தமிழ் மக்களின் பேரார்வம் விளக்கமாகத் தெரிகிறது. காட்சியைக் காண்போம், பட்டபாடு வீண்போகவில்லை, ஆட்சியாளர் மிரட்டலுக்கு நாடு செவிசாய்க்கவில்லை. முழு வெற்றி! மகத்தான வெற்றி!!**

*தம்பி! பல ஆண்டுகளாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள நான், 'புளகாங்கிதம்' கொள்ளத்தக்க பல சம்பவங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால், அன்று நான் நண்பர்களுடன், சென்னையின் பல பகுதிகளிலும் சுற்றிப் பார்க்கும்போது, என்னவென்று சொல்வேன், என் மனம் களிநடமாடிற்று, பாதை ஓரத்தில் ஆங்காங்கு நின்றுகொண்டு, அமைதியைக் காத்து நின்ற வீர இளைஞர்கள், வெற்றிப் புன்னகையுடன் இருந்த காட்சியைக் கண்டேன், கண்களில் நீர் துளிர்த்தது!! இதோ தமிழகம்! தன்மானத்தை இழக்கத் துளியும் சம்மதியோம், உரிமைக்கான போரிடத் தயங்கோம்! என்று உலகுக்கு அறிவிக்கும் தமிழகம்! மூடிக்கிடக்கும் கடைகள், வெறிச்சென்று கிடக்கும் அங்காடிச் சாலைகள், பள்ளிகளில் ஆசிரியர்கள். வெளியில் மாணவர்கள், சர்க்கார் நடத்தும் மோட்டார் பஸ்கள் ஆள் தேடும் காட்சி, மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்துசெல்லும் காட்சி, ஆலைகளில் ஆள் இல்லை, அரவம் இல்லை, எங்கும் வெற்றி, எவர் முகமும் வடிவழகுடன்; அர்த்தால் கூடாது என்று முன்பு ஆர்ப்பரித்தோர் கூட, ஊருடன் ஒத்துப்போயினர், தம்பி! அப்படிப்பட்ட மகத்தான வெற்றியை நான் கண்டதில்லை!!*

*எவ்வளவு ஏளனங்களைத் தாங்கிக்கொண்டோம் — எத்துணை இடர்ப்பாடுகள்—என்னென்ன வகையான பழிச்சொற்கள்! மக்களைத் திரட்டி, மகத்தான சக்தியாக்கிடும் 'மாமந்திரம்' தெரிந்த பெரியார், நமக்கு ஆதரவாக இல்லை. ஏதோ நடக்கட்டும், எப்படியோ தொலையட்டும் என்றும் இருந்துவிடவில்லை. ஏதாவதொரு காரணத்துக்காகக் காமராஜர் கூடச் சும்மா விட்டுவிடுவார்போலிருக்கிறது, இவரோ விடமாட்டேனென்கிருர், வெளுத்து வாங்குகிருர் பத்திரிகையிலும் மேடையிலும், 'இது கடைந்தெடுத்த காலித்தனம்: கண்ணீர்த்துளிகளின் கயவாளித்தனம்; அர்த்தால் தேவையில்லை'' என்றெல்லாம். அவருடைய எதிர்ப்பு ஒருபுறம் — அவருடைய ஊசிகளும் முட்களும் மற்றோர்புறம்—காமராஜர் சர்க்காரின் தண்டோரா! — காங்கிரஸ் கமிட்டிகளின் மறுப்பு வெளியீடுகள்— ஒன்ரு இரண்டா, எதிர்ப்புகள். இவ்வளவுக்குமிடையில், நேற்று வரை முரண்பட்டுக் கிடந்தவர்கள் அமைத்துள்ள சாவகட்சிக் கூட்டணியிலே, குழப்பமும் பிளவும் ஏற்படுத்தும் முயற்சிகள் வேறு'*

*"ஹலோ! ஹலோ!..."*

*"யாரு...நீங்களா?"*

*"ஆமாம், நான் தான் ...வணக்கம், வணக்கம் ...... ஆமாம், இரண்டு நாளாகச் சென்னையில்தான ..."*

*"சரி, என்னய்யா நடுராத்திரியில்..."*

*"நடுநிசிதான், ஆனல் என்ன செய்வது...எப்படியாவது இந்த அர்த்தாலை......'*

*"நிறுத்துவதா? என்னய்யா இது வேடிக்கை பேசுகிறீர்?"*

**முகப்பில்......**

**அழியா வைதீகத்தில் அழுந்திக் கிடந்த மக்களுக்கு, அறிவொளி வழங்கிய புத்த மார்க்கம் தந்த அறிவாலயம்—சாரநாத்.**

*"அவர் ரொம்பச்சங்கடப் படுகிருர்"*

*"அவருக்கு என்ன சங்கடம் இதிலே. அர்த்தால் ஏற்பாடு செய்கிற எங்களுக்கல்லவா சங்கடம், சஞ்சலம், எல்லாம"*

*"என்னிடம நம்பிக்கை வைக்கக் கூடாதா? நான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள மாட்டேனு? என்றெல்லாம் ரொம்பச் சொல்கிருர். தங்களிடம் நேரிலேயே பேச வேண்டுமாம்...."*

*"என்னிடம்பேச, என்ன இருக்கிறது. இது கூட்டணி திட்டமய்யா...ஒருவர் தீர்மானிக்கும் விஷயமல்ல"*

*"டெலிபோனில் விவரம் பேச முடியவில்லை. நீங்கள் உடனேபுறப்பட்டுச்சென்னை வந்தால் நல்லது, ரொம்பவும் விரும்புகிருர்"*

*"வருவதற்கு இயலாதே!, 19-ந் தேதி காலைதான் சென்னை வருகிறேன்."*

*"ஐயயோ! 19ந்தேதி வந்துஎன்ன செய்வது? உடனே பிளேனில் புறப்பட்டுவரச் சொல்கிருர்"*

*"முடியாதகாரியம். மேலும்வந்து நான் செய்வதற்கும்ஒன்றும்இல்லை. ஏதாவது பேச வேண்டுமானல், அண்ணாதுரையிடம் பேசுங்கள்."*

*"அந்த ஆள் இணங்கிவரமாட்டானே ..."*

*"நான்மட்டும் என்னவாம்! என்னய்யா இது! அர்த்தால் நிச்சயம் நடைபெறும். அது அமைதியுடன் நடத்தப்பட நான் சர்க்காருடன் ஒத்துழைக்கத்தான்விரும்புவேன். அதுவே தவிர, அர்த்தாலைக் கைவிட முடியாது. அது தெளிவாகி விடுவது நல்லது..."*

*சென்னைக்கும் மதுரைக்கும் நடுநிசியில் இப்படி "டெலிபோன்" கோவைக்கும் 'சேதி'—தூத்துக்குடிக்குத் "தூது"—எங்கெங்கு சமரசவாதிகள்—சந்தர்ப்பவாதிகள்— கிடைப்பார்களோ அங்கெல்லாம், தூதுபேசுவதும், பேரம்பேசுவதும், மும்முரமாக நடைபெறுகிறது. நீ தம்பி, இவைபற்றி ஏதுமறியாமல்,*

'அர்த்தால் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான காரியத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்ட வண்ணமிருக்கிறாய். நாங்கள் இங்கே, எங்கே சதிச்சுழலில் சிக்கி, இந்தமுயற்சி சுக்கு நூறாகி விடுகிறதோ, யார், எத்தகைய 'பிளவு' உண்டாக்கும் பேதத்தைத் தூவுகின்றார்களோ. என்றுபயந்தபடி இருந்துவந்தோம்

**"சர்வகட்சிக்கூட்டணி என்றபெயரால், பிப் 20ல் நடைபெற இருக்கும் காலித்தனத்தைக் கண்டித்துப் பெரியார்பேசப் போகிறார்—அனைவரும் வருக!—"** என்று சிதம்பரம் தெருக்களில், 19ந்தேதி பகலில், பட்டப் படிபபில் ஈடுபட்டிருக்கும் வாலிபரொருவர், ஒலிபரப்புகிறார்! எங்கெங்கு வாய்ப்பு கிடைத்ததோ அங்கெல்லாம், காமராஜர் கேள்விப்பட்டதும், முதுகில தட்டிக் கொடுத்து, 'சபாஷ்' கூறிப்பாராட்டத் தக்க வகையில், பெரிய இடத்தவர்கள் சிறிய காரியத்தில் ஈடுபட்டனர், பாவம சிரமத்துக்கு ஏற்ற பலன் கிட்டவில்லை; நாடு, அர்த்தாலை வெற்றிகரமாக நடத்திக் காட்டிற்று.

கடை அடைப்புக்கூட ஓரளவுக்கு நடைபெற்றுவிடும்; ஆனால், இவர்களால் அர்த்தால் நிகழ்ச்சியில் அசம்பாவிதம் நேரிடாதபடி, கலாம் விளையாதபடி தடுத்திட எங்ஙனம் முடியும், வீறுகொண்டெழும் மக்களிடை திடீரென்று கோபப்புயல் கிளம்பிவிட்டால், விபரீதம் நேரிடுவிடுமே, எதிர்ப்பட்டோரைத் தாக்குவது, எந்த நாசம்பற்றியும் கவலை கொள்ளாத போக்கு, சாவுபற்றிய பயமற்ற துணிவு, இவை கிளம்பிவிடுமே, இவை எல்லாவற்றையும்விட, வீடு வேகிறபோது கிடைத்தவரையில் பறிப்போம் என்று காலிகள் கிளம்பிவிடக் கூடுமே, அவர்களை எல்லாம் எப்படித் தடுக்கமுடியும், இவர்களுக்கு ஏது அந்த ஆற்றல், இவர்கள் என்ன போர் பல கண்டவர்களா இவர்கள் கெஞ்சிக் கூத்தாடினாலும், தொண்டை உலர உலரக்கூவினாலும், மக்களைக்கட்டுப்படுத்தமுடியுமா, அர்த்தால் என்றால் சாமானயமா, என்னென்ன நடைபெறப்போகிறதோ யார் கண்டார்கள், பம்பாயில் பார்த்தோமல்லவா, கொலையும் கொளளையும், கற்பழித்தலும் கத்திக் குத்தும, பயங்கரமான பலாத்காரமல்லவா தலைவிரித்தாடிற்று, இங்கும் அதுதான், பிறகுதான் தெரியப்போகிறது இந்த 'பச்சுக்கானா'க்களையும், கத்துக்குட்டிகளையும் நம்பினால்என்னென்ன நாசம் விளையும் என்ற பேருண்மை—இப்போது, என்னமோ, இதுகள் தூண்டிவிடுவது கேட்டு ஆட்டம் போடுகிறார்கள், பிப். 20ல் பல இடங்களில் பிணக்காடு பார்க்கபபோகிறார்கள், கொலையும் கொள்ளையும் கோரத்தாண்டவமாடப்போகிறது, பெண்டு பிள்ளைகள் குய்யோ முறையோ என்று கதறிப பதறி ஓடப்போகிறார்கள்—அப்போதல்லவா 'இதுகள்' முகத்திலே காரித் துப்பப் போகிறார்கள் நாட்டு மக்கள் – என்று நம்முடன் சேர மறுத்து, அதனாலேயே தமக்குத் தாமே வேதனையை வருவித்துக்கொண்ட பெரியவர்கள், பீதி மூட்டினர்.

எனக்கும் தம்பி, பயம்தான். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ஈடுபடும் கிளர்ச்சியானால், கட்டு மீறி யாரும் காரியமாற்ற மாட்டார்கள்; எவரேனும் அதுபோலானால், அவர்களிடம் மன்றாடும் உரிமை எனக்கு உண்டு, ஒத்துழைக்கும் பண்பு நமது கழகத் தோழர்களிடம் நிரம்ப உண்டு என்பது அறிவேன்—எனவே கலாம் எழாதபடி தடுத்திடமுடியும் என்று மார்தட்டிக் கூறுவேன்.

அதுபோன்றே, இப்பக்கம் செல்க! அப்பக்கம் செல்லற்க! என்று கூறிடவும், கட்டுக்குள் கொண்டுவரவும் முடியும் நண்பர் ம. பொ. சி. யால், தமிழரசுக் கழகம் மட்டும் கிளர்ச்சி நடத்துவதாக இருந்தால்.

அதுபோன்றே ஒவ்வொரு கட்சிக்கும்.

ஆனால், இதுவோ சர்வகட்சிக் கூட்டணி! பல்வேறு அணிவகுப்புகள்! ஒவ்வோர் அணிவகுப்புக்கும் பழக்கமாகியுள்ள முறைகள் உண்டு! எப்படி, இந்தக் கூட்டணியைக் கட்டுப்படுத்துவது? யாருடைய சொல்லுக்கு எந்த அளவு மதிப்புக் கிடைக்குமோ? யாரால் கலாம் விளைந்தது என்பதைச் சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாதே! இந்நிலையில் கூட்டணிக் கிளர்ச்சி, மூட்டிவிடுபவர்களின் சாகசத்துக்கு இரையாகி, கட்டுக்கு மீறிச்சென்றுவிட்டால், என்ன செய்வது, சென்னை சென்னைதான் பம்பாயல்ல என்று மார்தட்டித் தட்டிப் பேசிவிட்டோமே, அந்த நற்பெயர் கெடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமே எப்படி? எப்படி? என்று எண்ணி எண்ணிநான்பெருங்குழப்பமுற்றுக் கிடந்தேன். தம்பி! ஒரு தூய கொள்கைக்காக மக்கள் சக்தி திரண்டெழுந்தால் அந்தக் கொள்கைக்காகப் பாடுபடும் யாருடைய சொல்லுக்கும்கட்டுப்படுவர்—பெருந் தலைவர்களுக்கு மட்டுமே கட்டுப்படுவோம், இவர்கள் சொல்வதென்ன, நாங்கள் கேட்பதென்ன என்று இருந்துவிடமாட்டோம், எமக்கு இலட்சியம் முக்கியமே தவிர, தலைவரின் தோற்றம் கூட அல்ல, என்று கூறுவது போல மக்கள் நடந்துகொண்டனர், எப்போதும், நான் இதனை உணர்ந்து உவகை கொள்வேன்.

பிப் 20, இலட்சம் மக்கள் திரண்டெழுந்து நடத்திய மகத்தான ஊர்வலம், எனக்கு மக்களிடம் ஏற்கனவே உள்ள நம்பிக்கையை மேலும் அதிகமாக்கிற்று. ஆனால் ஒன்று, தம்பி, நான் 'குட்டை'யனல்லவா? அதுபற்றி எனக்கு இதற்குமுன் எப்போதும் வருத்தம் இருந்ததில்லை. பிப் 20ல், அடடா! இப்படிக் 'குள்ளமாக' இருக்கிறோமே, 'உயரமாக' இல்லாமற் போய்விட்டோமே, என்று நான் உள்ளபடி வருத்தப்பட்டேன். ஏன்? என்கிறாயா? கொஞ்சம் ஆவலை அடக்கிக்கொள், தம்பி! அடிகள், இடம் இல்லை என்கிறார். அடுத்த கிழமை கூறுகிறேன்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**



# கவிதை அரங்கம்

"அப்படியா அப்பெல்லஸ்!" என்று வேந்தன்
அங்கிருந்த கம்பாஸ்பி தன்னை நோக்கி
"என்னுயிரே! இன்னுயிரே! என்று நின்னை
ஏதேதோ பேசிவிட்டேன் காதல் தீயால்,
மன்னுயிரைப் போக்கும் ஆலம் இங்கே
நின்னுருவில் வந்ததையான் அறியா தென்றன்
பொன்னுயிரை அல்லோ உந்தன், எழில் வீசும்
புன்னுருவில் வைத்தேன் அந்தோ!பேதையானேன்''
எதிர்த்தாரை ஒழித்துவிட்டு யாரங்கே இன்னுமென்று
விழித்தாரையெல்லாம் வீர ஒளிவீசும் வேங்கையென
"அப்பலசே 'சின்னவனே' ஆரணங்கை வென்றாய்
வேறுபிழை செய்திருந்தால் மறந்திருப்பேன்
உப்பில்லா ஓவியமும் உன்கை பட்டால்
ஒப்பில்லா ஓவியமாய் ஆகுமாமே, அதுதான்போலும்
விலைபோகும் இவளுனக்கு வேறொன்றாகி
விலையில்லா மாணிக்கமாய் விளங்கினாளோ?
நேற்றென்னை உயிரென்றாள், உடல்தான் வேறென்றாள்.
இன்றுன்னைத்தன்னுடலின்பிரிவென்று கூறினாளோ
நிலையாக இவளுக்கு நீசதமில்லை என்றுநின்
கலைஅறிவு எடுத்துரைத்திருக்க வேண்டும் நண்பா''
வேலில்லா வீரனெடு வாளெடுத்ததில்லை என்ற
அளவில்லா புகழ் அங்கு அந்தத்தை யெய்தியதே,
"நீ ஒழிந்தாய், இவளொழிந்தாள், நம் நாட்டின்
பார்புகழும் பண்பாட்டை மாசுருத்தவந்த இந்த(ச்)
சமுதாயப் புல்லுருவி பூண்டோடொழிந்தனவே என்று
இருவரையும்ஒன்றாக்கி இறுதியைத்துவக்கிவைத்தான்

**எஸ். டி. இந்திரன்,**
மதுரை.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்சாண்டர் தன்னிடத்தில், உணர்ச்சி யோடு!
"அப்படியா, அப்பெல்லஸ்!" என்று, வேந்தன்
அருகிலுள்ள ஆய்தொடியை அழைத்து, அவளின்
பூப்போன்ற மென்கரத்தை ஓவியன் கையுடன்
பொங்கிட்ட உவகையோடு சேர்த்து வைத்தான்!
அப்போது ஓவியனும் அழகிகம்பாஸ்பியும்
அசையாத கற்சிலைகளானார்கள் விந்தையால்!

**வானவண்ணன்**
அண்ணாமலைநகர்.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில், உணர்ச்சியோடு
அப்படியா அப்பெல்லஸ் என்று வேந்தன்
"அசையாது நின்றிட்டான், அதன் பின்னே
செப்பரிய செயல் தன்னைச் செய்திட்டான்,
சேர்த்திட்டான், நண்பனிடம் கம்பாஸ்பியை,
ஒப்பில்லாக் காதல் கொண்டான், பண்பீந்தான்,
ஒண்கலைக்கு, உயிர் கொடுத்தான் புகழ்பெற்றான்"

**அ. சீனிவாசன்**
மதுரை.

★

அப்படியா அப்பெல்லஸ் என்று வேந்தன்
அன்பனுவும் குறைந்திடா வார்த்தை யினால்
செப்பரும் காதலினால் சேர்ந்திருவர் லயித்தாலும்
செயலளவில் காட்டாத செய்கையினை உங்களிடம்
இப்புவியில் இன்றே கண்டேன் என் [கேளென்று
அரும் நண்பா! கண்டதை உரைக்கின்றேன்–
கண்களால் காரிகையும் காணுவான்! அவ்வேளை
கவலையுற்று நீபார்ப்பாய் அவளையுந்தான்! அக்காலை
மண்டலத்து மன்னன் தான்விரும்பும் பெண்ணை
மதிகெட்டு தன்வயத்தே ஆக்காத மாண்புதனை,
நண்பனுக்கு துரோகம் நினையாத நற்பண்பை'
நீவிரும்பும் காதலியை ஒளியாது ரைத்தலையும்
உண்மையாய் காட்டிய "நீ உவந்து வாழு
இவளுடனே ஊழிக்காலத்துமெனக் கூறிச்சென்றான்

**மு. வரதராசன்,**
மாயனூர்.

★

.............................................

கலையோடு அழகிருந்தால் நிலமை வேறு
கம்பாஸ்பி உன்றனுக்கோர் எழிலின் சோலை
இலையோ? சொல், என் அருமை நண்பா என்று
எதிர் நின்ற அப்பெல்லசை மன்னன் கேட்டான்;
கலை செறிந்த உன்வாழ்விற் கின்னா செய்த
கடையேனை நன்னயத்தால் காத்த உண்மை
சிலையாக நாடெங்கும் வடித்தே உந்தன்
செந் தன்மை செப்புதற்கே வாழுகின்றேன்;
எத்திக்கும் வீரத்தால் கொடியை நட்டீர்
எனக்கீயத் துணிந்துவிட்டீர் இன்ப வாழ்வை.
புத்தி தனைப் பறிகொடுத்தேன் புன்மை செய்தேன்;
புல்லன் என் பிழை தவிர்க்கவேண்டும் ஆங்கே,
சித்திரத்தால் உளம் நெகிழ்ந்த தன்றி அந்த
சிங்காரி நிறை தவற வில்லை; நான் தான்
பித்து கொண்டேன் அன்னவளின் அழகின் மீது
பெருந்தவறு அதையடைய முயன்ற தொன்றே
ஒப்பற்ற உம்முடைய தியாகத்தாலே
ஒளி காட்டி யெனை யுயர்த்தோ ருக்கிவிட்டீர்;
இப்புவியில் நான் பாவி! என்றான் கண்ணீர்
இரு விழிசிந்த அலெக்ஸாண்டர் காலில் வீழ்ந்து
தப்பில்லை அப்பெல்லஸ் உன்றன்மீது வீணை
தந்தியிலே கரம்பட்டால் என்ன ஆகும்?
ஒப்பற்ற அலெக்ஸாண்டர் உரைத்தானஃதை
ஒடினான் அப்பெல்லஸ் அடிவானம் நோக்கி!

**எம். செண்பகராசன்**
தாரணமங்கலம்.

---

அலெக்ஸாண்டர் கவிதை அரங்கம்
முடிவுற்றது.

★

# புகையிலை

500-ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், அங்கே இயற்கையாக விளைந்து கொண்டிருந்த புகையிலையைக் கண்டார். மேற்கிந்தியத் தீவுகளிலே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள், ஆண்டவனைத் துதிக்க ஆலயத்திற்குச் சென்று, விழாக் கொண்டாடிய, வேளையிலே அவர்கள் அந்த இலையைச்சுருட்டி சுருட்டாக்கிப் புகைவிடுவதைக் கண்டார் — வியந்தார். அவரது முயற்சியால் புகையிலை ஐரோப்பாவில் பரவியது. "டுபாகோ" (Tobago) என்ற அச்சிறு தீவிலே அது காணப்பட்ட காரணத்தால் அதை "டுபாக்கோ" (Tobacco) என்று ஐரோப்பியர் அழைக்க ஆரம்பித்தனர்.

1580-ம் ஆண்டில் திராவிடத்திற்கு வந்த, போர்த்துகீசியமாலுமிகள் இங்கேபுகையிலையைப் பயிரிட்டுச் சென்றார்கள்—இங்கிருந்து வடநாட்டுக்கு பின்பு சென்றது. புகைக்க உபயோகப்பட்டதால் புகை—இலை—புகையிலை என்று அதற்குத் தமிழர் பெயர் சூட்டினர்.

கொலம்பசுக்குப்பின் அமெரிக்காவிலே குடியேறிய ஆங்கிலேயர் அங்கே ஏராளமான புகையிலைத் தோட்டங்களை உண்டாக்கினர். புகையிலை உற்பத்தியில் அமெரிக்கா, முயல் வேகத்திலும், திராவிடம் ஆமை வேகத்திலும் முன்னேறிக்கொண்டிருந்தன.

முன்னூறு ஆண்டுகள் மறைந்தன. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. பிரிட்டனில் உள்ள சிகரெட் தொழிற்சாலைகளுக்காக, திராவிடத்திலே புகையிலைப் பயிர் செய்வதற்கு ஊக்கமும், உதவியும் காட்டினார்கள். அதிலே சுயநலமும் சுரண்டலும் கலந்திருந்தாலும் திராவிடத்திலே புகையிலை உற்பத்தி பெருகியது. பெருகிய காரணத்தால் புகையிலை விளைவிப்பதில் அமெரிக்காவோடு சரிசமமாகப் போட்டி போட ஆரம்பித்துவிட்டது, திராவிடம்!

நமது புகையிலை மண்டலங்களிலே இப்போது சுமார் 2¼-லட்சம் ஏக்கர்களிலே புகையிலைத் தோட்டங்கள் உள்ளன. லங்காத்தீவுகள், மேல் கோதாவரி, கிழக் கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களிலே இத்தோட்டங்கள் மிகுதி. வண்டல் படிந்த வளமான நிலங்கள் இவை.

*

மோகன்லால் பாரிக்—என்ற வடநாட்டுப் புகையிலை நிபுணர், திராவிடப் புகையிலையைப்பற்றிக் குறிப்பிடும்போது,

"இந்தியப் புகையிலை உற்பத்தியில் மிகமிக முக்கியமான மாகாணம் சென்னை. மொத்தத்தில் 45-சதவீதத்தை சென்னை ஒன்றுமட்டுமே விளைவித்து விடுகிறது. இன்னொரு கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், சிகரெட்டுக்கு உபயோகமாகும் உயர்ந்தரக வர்ஜீனியப் புகையிலையில் 95-சதவீதத்திற்கு மேல் சென்னை உற்பத்தி செய்துவிடுகிறது. உலக மார்க்கெட்டிலும் சென்னைப் புகையிலைக்கு அளவுகடந்த கிராக்கி இருக்கிறது" என்று எழுதுகிறார்.

தாஸ்குப்தா (Dasgupta) என்ற மற்றொரு வடநாட்டு பூகோளப் பொருளாதாரப் பேராசிரியரும் "உயர்ந்தரகப் புகையிலை உற்பத்திக்கு ஒரு இடம் உண்டு என்றால் அது சென்னை" என்று கருத்துப்பட எழுதியிருக்கிறார்.

நாம், நமது புகையிலை மண்டலங்களின் மூலம் 25-கோடி ராத்தல் புகையிலையை உற்பத்தி செய்கிறோம். இதில் 18-கோடி ராத்தல் திராவிடத்திலும், வடநாட்டிலும் செலவழிந்துவிடுகிறது. மிகுதி 7-கோடி ராத்தலை இப்போது ஏற்றுமதி செய்கிறோம். திராவிடப் புகையிலையின் மொத்த மதிப்பு சுமார் 50-கோடி ரூபாய்!

ருஷ்யா, ஜப்பான், பிரிட்டன், ஹாங்காங்—முதலிய நாடுகள் திராவிடப் புகையிலையை ஆண்டுதோறும் போட்டி போட்டுக்கொண்டு வாங்குகின்றன.

விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், காவி, கமண்டலமேந்திகள், மதகுருக்கள் முதலியோரிலிருந்து, நாட்டின் ஒரு மூலையிலே நாலு முழக் கந்தையின்றி நானிலத்தை அறியாது நலிந்து கிடக்கிறானே அந்த ஏழைவரை எல்லோருமே இன்று புகையிலைக்கு அடிமை எனலாம்.

*

பணப் பயிராகிய புகையிலை சிறந்த செல்வப் பொருளாக மாறிவிட்டது. அதை உற்பத்தி செய்யும் நாடுகள் இன்று டாலர் சம்பாதிக்கின்றன. அந்தப் புகையிலை நமது தாயகத்திலே, திருவிடத்திலேயும் விளைகிறது — தேவைக்கு மேல் விளைகிறது; 50-கோடி ரூபாய் மதிப்புள்ள புகையிலையாக விளைகிறது.

இது அசல் சிவகிரி, இது வேதாரணிய புகையிலை — விறுவிறுப்பானது, காரம் மணம் நிறைந்தது என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்தப் புகையிலையின்மேல் நம் சர்க்கார் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நிறைய பணம் கிடைக்கும். அதுமட்டுமல்ல, அந்தப் பணம் நம்மிடையே உலவவும் வேண்டும். அதைச் செய்வார்களா?

"தொண்டைமான்"

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.